Registered as a Newspaper
பக்கங்கள் 16 விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 38
கதிர் : 235
புதன்கிழமை 19 ஜூலை 2023
ஆடி 03 ஆம் நாள் – வள்ளுவர் ஆ[illegible] 2054

## ரணிலுடனான சந்திப்பு பயனில்லாமல் முடிவு!

### காணி, பொலிஸ் இல்லாத மாகாண அதிகாரம் வழங்கத் தயாராம்

### வெறும் கண் துடைப்பு நாடகமே தமிழ்க்கட்சிகள் காட்டம்

கொழும்பு, ஜூலை 19
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தமிழ்க் கட்சிகளுக்கும் இடையில் நேற்று நடைபெற்ற சந்திப்பு, எந்தவிதமான பயனுமில்லாமல் முடிவுக்கு வந்தது. அதிகாரப் பகிர்வு தொடர்பில் ரணில் வைத்த கோரிக்கைகளை ஏற்கமறுத்த தமிழ்த் »13



## வடக்கு - கிழக்கை இணைக்கோம்

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 19
வடக்கு – கிழக்கு மாகாணங்களை இணைப்பது தொடர்பில் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. அது குறித்த ஏற்பாடோ கலந்துரையாடல்களோ அரசாங்கத்துக்குள் இடம்பெறவில்லை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். »13

### நாவாந்துறை மோதல் நேற்று இருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 19
யாழ்ப்பாணம், நாவாந்துறைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம் »06

### நீதிபதி மீதான விமர்சனம் மிகமோசமான இனவாதம்!

வீரசேகரவுக்கு சிறீதரன் கண்டனம்!

கொழும்பு, ஜூலை 19
முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி சரவணராஜாவுக்கு எதிராக, நாடாளு »06

### கோதுமை மா விலை ரூபா 10 குறைப்பு

கொழும்பு, ஜூலை 19
செரண்டிப் மற்றும் பிறிமா கோதுமை மாவின் விலை, நேற்று செவ்வாய்க்கிழமை முதல் 10 ரூபாவால் »14

### குருதி வெள்ளத்தில் நேற்று இளைஞனின் சடலம் மீட்பு!

போதைப்பொருள் காரணமா? பொலிஸார் தீவிர விசாரணை »14

### எதிர்வரும் மாதங்கள் மிகத் தீர்க்கமானவை

இலங்கை தொடர்பில் உலகவங்கி தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 19
எதிர்வரும் மாதங்கள் இலங்கைக்குத் தீர்க்கமானவை என்று, உலக வங்கியின் தெற்காசியப் »06

## ஈழ அகதிகளுக்கு இலங்கைக் கடவுச்சீட்டு

கொழும்பு, ஜூலை 19
சென்னையிலுள்ள இலங்கைத் துணைத்தூதரகத்தின் ஊடாக தமிழ் நாட்டிலுள்ள ஈழத்தமிழர்களுக்கு சகல நாடுகளுக்குமான கடவுச்சீட்டுகள் விநியோகிக்கப் படவுள்ளன.
தமிழ் நாட்டிலுள்ள இலங்கை அகதி முகாம்களில் தங்கி »07







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவ நெருக்கடிகளுக்கு கெஹலிய பொறுப்பல்ல!



## சாகர எம்.பி. தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 19**

**நாட்டில் மருத்துவமனைகளில் அண்மைக்காலமாகப் பதிவாகிய மரணங்களுக்கு அவர்களுக்குப் பயன்படுத்திய தரமற்ற மருந்துகளே காரணமென பல்வேறு சிக்கல்கள் உருவாகியுள்ள நிலையில் அதற்குப் பொறுப்பேற்று சுகாதார அமைச்சர் பதவி விலகவேண்டிய அவசியமில்லை.**

-இவ்வாறு பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாட்டின் சுகாதாரத்துறையில் நெருக்கடியான சூழல் தோன்றியுள்ளது. சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல பதவி விலகவேண்டும் என எதிர்ப்புக்கள்- ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சுகாதார அமைச்சர் பதவி விலகவேண்டிய அவசியமில்லை. அவர் மக்களால் தெரிவுசெய்யப்பட்டவரே.

நாடு பெரும் அந்நியச் செலாவணி நெருக்கடியை எதிர்கொண்டவேளை சுகாதார அமைச்சராகப் பதவியேற்ற கெஹலிய, தனது கடமைகளை வெற்றிகரமாகச் செய்துள்ளார்.

அமைச்சரின் செயற்பாடுகள் காரணமாகவே இந்த நெருக்கடி உருவானதென விசாரணையில் தெரியவரவில்லை - என்றார். (ச-இ)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூலை 19

யாழ்ப்பாணம்- சரவணை தேவபுரம் அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயிலின் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு சிறப்புச்சொற்பொழிவு எதிர்வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் ஓகஸ்ட் மாதம் 2ஆம் திகதி புதன்கிழமை வரை பிற்பகல் 6 மணிக்கு ஆலயப் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ள நிகழ்வில் சொற்பொழிவுகளை சைவப்புலவர்கள் செ. த. குமரன், பொன். சந்திரவேல், சி.கா.கமலநாதன், இளம்சைவப்புலவர்கள் ச.நவநீதன், க. கைலநாதன், த. மனோஜ்குமார், க.கயிலைவாசன், நித்திய பாபுதரன் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும். (ய)

# மீனவர் வாழ்வாதாரத்தில் விளையாடுகிறார் டக்ளஸ்

## சிறீதரன் எம்.பி. சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 19

நெடுந்தீவைச் சூழ பத்துக்கும் மேற்பட்ட கடற்படை முகாம்கள் உள்ளபோதும் இந்திய, உள்ளூர் இழுவைப்படகுகளைக் கட்டுப்படுத்தும் வல்லமை அவற்றுக்கு இல்லை. இந்தச் சட்டவிரோத மீன்பிடியைத் தடுப்போம்; இந்தியாவுடன் பேசுவோம் எனக் கூறும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் எந்தவித முடிவும் எடுக்கப்படவில்லை.

-இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நெடுந்தீவு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

நெடுந்தீவு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் அண்மையில் நெடுந்தீவுப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது இந்தியாவின் இழுவைப் படகுகளால் நெடுந்தீவின் கடல்வளம் தொடர்ந்து அழிக்கப்பட்டு வருகின்றது. அதனைத் தடுத்து நிறுத்தி எமது வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கவேண்டும் எனக் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசம் சுட்டிக்காட்டியது. அப்போது நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனுக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்குமிடையில் வாதப் பிரதிவாதங்கள் எழுந்தன.

நெடுந்தீவுக் கடலில் நாளாந்தம் 400 முதல் 500 உள்ளூர் மற்றும் இந்திய இழுவைப்படகுகள் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை அழிக்கின்றன.

நெடுந்தீவைச் சூழ கடற்படை முகாம்கள் அதிகளவில் காணப்படுவதுடன் கடற்றொழில் அமைச்சராலும் இதனைத் தடுக்க முடியவில்லை.

இந்திய இழுவைப்படகுகளை கட்டுப்படுத்த இந்தியாவிடம் கூட்டாகப் பேசுவோம் என்று கூறும் கடற்றொழில் அமைச்சரால் எந்தவித தீர்க்கமான முடிவுகளும் எடுக்கப்படவில்லை. மக்களைப் பிழையாக வழிநடத்துவதை கடற்றொழில் அமைச்சர் நிறுத்தவேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் சுட்டிக்காட்டினார். (ச-125)

# கெஹலியவை விலகக்கோரி உணவு தவிர்ப்புப் போராட்டம்

கொழும்பு, ஜூலை 19

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல உடனடியாகப் பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்தி சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளால் உணவு தவிர்ப்புப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சுக்கு முன்பாக முன்னெடுக்கப்படும் இந்த உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், சட்டத்தரணிகள், மருத்துவர்கள் உள்ளிட்ட தரப்பினர் கலந்துகொண்டனர்.

இவர்கள் சுகாதார அமைச்சுக்கு முன்பாக உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பிக்கத் தயாரான போது, பொலிஸாரால் தடை ஏற்படுத்தப்பட்ட நிலையில், வேறொரு இடத்திலிருந்து உணவு தவிர்ப்பை ஆரம்பிக்க சிவில் செயற்பாட்டாளர்கள் நடவடிக்கை எடுத்தனர். (எ-இ)

# பல்கலைக்கழக மாணவி சடலமாக மீட்பு!

அநுராதபுரம், ஜூலை 19

பல்கலைக்கழக மாணவி ஒருவர் வீட்டில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

ருகுணு பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் 23 வயதுடைய எஸ்.ஆர்.சுசந்திகா என்ற மாணவியே அநுராதபுரம் கெக்கிராவ பிரதேசத்திலுள்ள தனது வீட்டில் இருந்து நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சடலத்தை மருத்துவமனையில் ஒப்படைத்த பொலிஸார், மாணவியின் பெற்றோரிடம் வாக்குமூலத்தைப் பெற்று மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-ரி2-22)

# கசிப்புடன் இளைஞர் கைது

**யாழ்ப்பாணம், ஜூலை 19**

**மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசத்தில் 500 மில்லிலீற்றர் கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.**

**பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மானிப்பாய் பொலிஸார் சந்தேகநபரைக் கைது செய்துள்ளனர்.**

**கைது செய்யப்பட்டவர் ஊர்காவற்றுறை, நாரந்தனையைச் சேர்ந்த 28 வயதுடையவர் என்றும், அவர் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-125)**

# சுழிபுரம் விக்ரோரியாவுக்கு நேரில் சென்ற சரவணபவன்

## கல்லூரியின் அபிவிருத்தி தொடர்பில் ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜூலை 19

சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரிக்கு நேற்றுமுன்தினம் சென்ற நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் நிதிப்பற்றாக்குறையால் அங்கு இடைநிறுத்தப்பட்டுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்ந்தார்.



நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்தபோது ஈஸ்வரபாதம் சரவணபவன் சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க பாடசாலையில் மூன்று மாடிக் கட்டடத்துக்காக நிதி ஒதுக்கியிருந்தார். நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட நிதிப் பற்றாக்குறை காரணமாக கட்டடத்தின் கட்டுமான வேலைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இந்தநிலையில் நேற்றுமுன்தினம் பாடசாலைக்குச் சென்ற நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் மூன்று மாடிக் கட்டடத்தின் எஞ்சிய கட்டுமானப் பணிகள் தொடர்பாகப் பாடசாலை அதிபருடனும், பாடசாலைச் சமூகத்துடனும் கலந்துரையாடினார். பாடசாலையின் ஏனைய தேவைகள் தொடர்பாகவும் கேட்டறிந்தார்.

நிதிப் பற்றாக்குறையால் இடைநிறுத்தப்பட்டுள்ள கட்டடக் கட்டுமானப் பணிகளைத் தொடரும் வகையில் உரிய அமைச்சுடன் கலந்துரையாடி நிதி பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் உறுதியளித்தார். (எ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலின் முயற்சிகளுக்கு எதிர்க்கட்சிகள் தடையாம்

## ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 19

**நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தும் வேலைத்திட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்து வருகிறார். குறுகிய அரசியல் நோக்கம் கொண்ட எதிர்க்கட்சிகளின் செயற்பாட்டால் வேலைத்திட்டங்களை முறையாக முன்னெடுக்க முடியாதுள்ளது.**

-இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் சாகல ரத்நாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: ஒரு வருடத்துக்கு முன்னர் நாட்டு மக்கள் நாளைய தினத்துக்கு என்ன செய்யப்போகிறோம் என்ற நிச்சயமற்ற நிலையிலேயே இருந்தனர்.

அந்தளவுக்கு நாடு வங்குரோத்து அடைந்திருந்தது. மக்களின் எதிர்பார்ப்புகள் அனைத்தும் வீணாகிப்போன நிலையிலேயே ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டைப் பொறுப்பேற்றார்.

ரணில் விக்கிரமசிங்க தனது அரசியல் அனுபவம் மற்றும் திறமையால் மக்கள் தலை நிமிர்ந்து செல்லக்கூடிய நிலைமையை ஏற்படுத்தி இருக்கிறார். ஆனாலும் நாட்டில் ஸ்திரமான பொருளாதார நிலைமையை ஏற்படுத்த அனைவரதும் ஒத்துழைப்புத் தேவையாகும்.

பொருளாதாரத்தைப் பலப்படுத்த ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்து வரும் வேலைத்திட்டங்களுக்குத் தடைகளை ஏற்படுத்தும் வகையில் குறுகிய அரசியல் நோக்கம்கொண்ட எதிர்க்கட்சிகள் செயற்பட்டு வருகின்றன.

மக்கள் இது தொடர்பாக சிந்தித்துச் செயற்படவேண்டும் - என்றார். (எ-இ)

# வெளிப்படையின்மையால் மருத்துவச் சிக்கல்

## வர்த்தக சம்மேளனம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 19

மருந்துகளைக் கொள்வனவு செய்யும்போது உயர்தர மருந்துகள் கொள்வனவு செய்யப்படுவதை தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை உறுதிப்படுத்த வேண்டும் என இலங்கை வர்த்தக சம்மேளனம் தெரிவித்துள்ளது.

மருந்துத் தட்டுப்பாடு நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியிலிருந்து உருவாகியது.

வலுவான மற்றும் வெளிப்படையான கொள்முறை இல்லாததால் தற்போதைய மருத்துவப் பிரச்சினை உருவாகியுள்ளது.

ஆகவே வெளிப்படையான கொள்முதலை உறுதிப்படுத்தவும் வலுப்படுத்தவும் விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்றும் இலங்கை வர்த்தக சம்மேளனம் தெரிவித்துள்ளது. (ச-இ)

# மருத்துவமனை மரணங்கள்; 3 வாரங்களில் ஆய்வறிக்கை!

கொழும்பு, ஜூலை 19

சர்ச்சைக்குரிய மருந்துகளால் நோயாளர்கள் உயிரிழந்தனர் என முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான விசாரணை ஆய்வறிக்கை எதிர்வரும் 3 வாரத்தில் சமர்ப்பிக்கப்படும் எனக் குழுவின் உறுப்பினர் மருத்துவ சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

மருந்துகளின் ஒவ்வாமை காரணமாக நோயாளர்கள் உயிரிழக்கும் சம்பவங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவால் 6 பேரடங்கிய குழு அண்மையில் நியமிக்கப்பட்டது.

பொரளை மருத்துவ ஆராய்ச்சி நிறுவன பணிப்பாளர், மருத்துவர் தேதுனு டயஸின் தலைமையில் இந்தக் குழு நியமிக்கப்பட்டது.

இந்தக் குழு 3 வாரங்களில் அறிக்கை சமர்ப்பித்து அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடவுள்ளது என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

# பால் உற்பத்திக்கு ரூ.250 மில்லியன் பிரான்ஸ் நிதியுதவி

கொழும்பு, ஜூலை.19

இலங்கையின் பால் உற்பத்தியை அபிவிருத்தி செய்ய 250 மில்லியன் ரூபாவை வழங்குவதற்கு பிரான்ஸ் முன்வந்துள்ளது.

விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர மற்றும் பிரான்ஸ் முகவர் நிறுவன பிரதிநிதிகளுக்குமிடையில் கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது.

இதன்போதே முதற்கட்ட இணக்கம் பிரான்ஸுடன் எட்டப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. நாட்டின் பால் உற்பத்தியை அதிகரித்தல், பாலின் தரத்தை அதிகரித்தல் மற்றும் கறவைப் பசுக்களை பராமரித்தல் போன்ற நடவடிக்கைகளுக்காக இந்த நிதியுதவியை பிரான்ஸ் கையளிக்கவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-ரி3)

# ஜனாதிபதி தேர்தலில் களமிறங்கும் டலஸ்



கொழும்பு, ஜூலை 19

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளராக நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெருமவை முன்னிறுத்தத் தீர்மானித்துள்ளோமென சுதந்திர மக்கள் பேரவை தெரிவித்துள்ளது.

அதன்படி, சுதந்திர ஜனதா சபை தனக்கு ஆதரவளிக்கத் தயாராக உள்ளவர்களுடன் கூட்டணி அமைக்கத் தயாராக உள்ளது என்வும் தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பில் எதிர்க்கட்சிகளுடன் கலந்துரையாடுவதற்குத் தீர்மானித்துள்ளோம் என நாடாளுமன்ற உறுப்பினர் லலித் எல்லாவல தெரிவித்தார். நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு சுதந்திர மக்கள் பேரவை மிகவும் வெற்றிகரமான வேலைத்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றது. ஊழல் மோசடிகளைத் தடுக்கும் வகையில் அரசமைப்பை மாற்றவும் நாம் தயாராகவுள்ளோம் என்றும் சுதந்திர மக்கள் பேரவை தெரிவித்துள்ளது. (ச-இ)




ஏமாறுறவன் இருக்கிறமட்டும் ஏமாத்துறவனும் இருக்கத்தான் செய்வான். இப்ப பிடிபடுற 'கள்ள லைசென்ஸ்' விசயத்திலையும் இப்பிடித்தான் நடந்திருக்கு. ஒரு மோட்டர்சைக்கிள் ஓடுற லைசென்ஸ் எடுக்கிறதெண்டாலே பெரும்பாடு படவேண்டி இருக்கு. போர்ம் எடுக்கிறது, மெடிக்கல் செய்யிறது, எக்ஸாம் எழுதிறது, ட்ரயல் காட்டுறது எண்டு எல்லாம் செய்து கையில லைசென்ஸ் வந்து சேர குறைஞ்சது ஆறு மாதமாயிடும். அதுவும் எல்லாம் ஒழுங்கா நடந்தாத்தான். இடையில ஏதும் எக்ஸாமோ, ட்ரயலோ, மெடிக்கலோ சறுக்கினால் அவ்வளவுதான். காலம் இன்னும் இழுபடும்.

அதிலையும் மெடிக்கல் பெயில் எண்டால், அவ்வளவுதான். கூடுதலா ஒரு கண்ணில ஏதும் பிரச்சினை வந்து அந்தக் கண் தெரியாமல் போனால், மெடிக்கல் கிடைக்காது. இப்பிடி ஏதும் பிரச்சினையளால மெடிக்கல் பெயிலாகி வாறவையை வாசலிலேயே அமுக்கி, அவையின்ர மண்டையைக் கழுவி 'ஒரு பிரச்சினையுமில்லை. நாப்பதாயிரம் தந்தால் உள்ளுக்கால அலுவல் பார்த்து ஒரு கிழமைக்குள்ள லைசென்ஸை கையில கிடைக்கச் செய்யலாம்' எண்டு ஆசை காட்டுறதுக்கு எண்டே ஒரு குரூப் இருக்குது. அதுக்கு தலையாட்டுறவையிட்ட காசை வாங்கிக் கொண்டு வீட்டுக்கே நேர ஒரு வாகனத்தில போய், அங்க வைச்சே அவையைப் படம் எடுத்து, பிங்கர் பிரிண்ட் எடுத்திட்டு வந்து ஒரு கிழமைக்குள்ள லைசென்ஸைக் கையில குடுத்திடுவினம். ஆக்களுக்கு ஏத்தபடி நாப்பதாயிரமோ, அம்பதாயிரமோ வாங்கிக் கொண்டு அவை மாறிடுவினம். இப்பிடி ஏதும் கண் பார்வைக் குறைபாடு உள்ளவை, அவசரமா வெளிநாட்டுக்குப் போறவை காசைப் பாக்காமல், காசு குடுத்து லைசென்ஸை எடுக்கினம். ஆனால் அவை அப்பிடிக் காசைக் குடுத்து ஒரிஜினல் லைசென்ஸ்தான் வந்திருக்கு எண்டு நினைப்பினம்.


அதைவிடப் பெரும் கூத்து என்னெண்டால், இந்தக் கள்ள லைசென்ஸின்ர காலம் முடிஞ்சு, அதைக் கொண்டுபோய் மோட்டர் ட்ரபிக் டிப்பார்ட்மெண்டில ஒப்படைச்சு, புதுப்பிச்சும் இருக்கினம். எப்பிடி கள்ள லைசென்ஸை டிப்பார்மெண்டில புதுப்பிக்க முடியும்? அங்கதான் இந்தக் கள்ள லைசென்ஸ்காரர் ஒரு வேலை செய்திருக்கினம். தங்களிட்ட காசு தாறவையிட்ட எடுக்கிற டேட்டா எல்லாத்தையும் டிப்பார்ட்மெண்டில உள்ள 'கறுத்தாடு' மூலமா ஹெட் ஒப்பீஸ் சேர்வரில பதிஞ்சிருக்கினம். ஆனால் போர்ம், எக்ஸாம் பேப்பர், மெடிக்கல் அங்க இருக்காது. லைசென்ஸ் புதுப்பிக்கேக்க ஏன் அதுகளைப் பார்க்கப் போயினம்? அதால கள்ள லைசென்ஸை புதுப்பிச்ச ஆக்களும் இருக்கினம். ஆனால் அவைக்கும் தங்களிட்ட இருக்கிறது கள்ள லைசென்ஸ் எண்டு தெரியாது. இப்ப ஏதோ ஒருவகையில இந்த லைசென்ஸ் விசயம் வெளியில வந்து, கள்ள லைசென்ஸ் எடுத்தவை எல்லாரையும் பொலிஸ் பிடிச்சுக் கொண்டு திரியுது. அதைவிட இந்தக் கள்ளலைசென்ஸ் செய்யிறவைக்கு, டிப்பார்ட்மெண்டுக்க இருந்து வேலை செய்து குடுத்த 'கறுப்பாடுகளையும்' பொலிஸ் மோப்பம் பிடிச்சிட்டுது எண்டும் ஒரு கதை. எப்ப அந்த ஆடுகள் பிடிபடுகுதுகளோ?



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயதாகின்றதே என்ற கவலை இனி மனிதர்களுக்கு இல்லை!



**நியூயோர்க், ஜூலை 19**
**மனிதர்கள் அனைவருக்கும் உள்ள பொதுவான கவலை வயதாகின்றதே என்பது. அவர்களுக்கு மகிழ்ச்சியளிக்கும் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளனர் அமெரிக்காவின் ஹார்வர்ட் பல்கலைக்கழக விஞ்ஞானிகள்.**

மனிதர்கள் வயதாகுவதைத் தடுக்கும் வேதிக் கலவை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று அவர்கள் அறிவித்துள்ளனர். இது தொடர்பாக ஹார்வர்ட் விஞ்ஞானி டேவிட் ஷின்கிளயர் தனது ருவிற்றர் பக்கத்தில் பதிவொன்றை இட்டுள்ளார்.
மரபணுச் சிகிச்சை மூலம் வயதைக் குறைக்க முடியும் என்பதை எங்களது முந்தைய ஆய்வில் நிரூபித்தோம். வேதிக் கலவை மூலமும் வயதைக் குறைக்கமுடியும் என்பதை இப்போது நிரூபித்துள்ளோம்.
கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாக இது தொடர்பாக எங்கள் குழு தீவிர ஆராய்ச்சியில் ஈடுபட்டு வந்தது. அந்த ஆராய்ச்சியின் விளைவாக வயதைக் குறைக்கும் மூலக் கூறுகளைக்கண்டுபிடித்துள்ளோம். குறைந்தவிலையில் மனித செல்களுக்குப் புத்துணர்வு ஊட்டுவதற்கான ஒரு முன்நகர்வு இது என்று அவர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.
முதற்கட்டமாக இந்த வேதிக்கலவை எலி மற்றும் குரங்குகளுக்குச் செலுத்தி பரிசோதிக்கப்பட்டுள்ளது. பரிசோதனையின் முடிவில், மூளைத் திசுக்கள், கிட்னி, பார்வை ஆகியவற்றில் மேம்பாடு ஏற்பட்டுள்ளது என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (ஏ-இ)


## கேரள முன்னாள் முதல்வர் உம்மன் சாண்டி மறைவு

புதுடில்லி, ஜூலை 19
கேரள மாநில முன்னாள் முதல்வரும், காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவருமான உம்மன் சாண்டி பெங்களூர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுக்காலை சிகிச்சை பயனின்றி காலமானார்.
அவரது இறுதிச் சடங்கு நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.
உம்மன் சாண்டி மறைவுக்கு இந்தியாவின் பிரதமர் மோடி, கேரள மாநில முதல்வர் உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர். (ஏ-இ)

## 3 வயதுக் குழந்தை சூடு ஒரு வயது சகோதரி பலி

நியூயோர்க், ஜூலை 19
மூன்று வயதுக் குழந்தை ஒன்றின் துப்பாக்கிச் சூட்டில் அந்தக் குழந்தையின் ஒரு வயதான சகோதரி உயிரிழந்த சம்பவம் ஒன்று அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் நடந்துள்ளது.
இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது. வீட்டில் பாதுகாப்பற்ற முறையில் வைக்கப்பட்டிருந்த கைத்துப்பாக்கியை 3 வயதுக் குழந்தை எடுத்து சுட்டு விளையாடியுள்ளது.
இதன்போது தவறுதலாக துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த ஒரு வயதுக் குழந்தை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டபோதும், சிகிச்சை பயனின்றிக் குழந்தை உயிரிழந்துள்ளது. (ஏ-இ)

# பாம்புத் தோட்டத்துக்கு படையெடுக்கும் மக்கள்



லண்டன், ஜூலை 19
சுற்றுலாப் பயணிகளையும், பயணப் பிரியர்களையும் கவரும் நோக்கில் புதிய புதிய முயற்சிகள் பல்வேறு நாடுகளில் முன்னெடுக்கப்படுகின்றன. வியட்நாமில் உருவாக்கப்பட்டுள்ள பாம்புத் தோட்டம் பலரின் ஆர்வத்தைத் தூண்டியிருக்கும் நிலையில், அங்கு செல்ல மக்கள் ஆர்வம் காட்டுகின்றனர்.
டோங் டாம் என்னும் இந்தத் தோட்டத்தில் உள்ள மரங்களில் பழங்களோ காய்கறிகளோ இல்லை, பாம்புகளே இருக்கின்றன. மரத்தின் கிளைகளில் பாம்புகள் மட்டுமே நிறைந்துள்ளன.
அங்கு 400க்கும் மேற்பட்ட விஷப்பாம்புகள் உள்ளன என்று கூறப்படுகின்றன. அவற்றின் விஷத்தில் இருந்து மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன.
அங்கு பாம்புக்கடிக்குப் பயனுள்ள மாற்று மருந்துகளை உருவாக்கத் தினசரி பரிசோதனைகளும் நடத்தப்படுகின்றன.
பாம்புப் பண்ணைக்கு ஆண்டுதோறும் லட்சக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். மரக்கிளைகளை அலங்கரிக்கும் பாம்புகளின் அசாதாரண காட்சியைக் கண்டு களிக்கிறார்கள். இந்தப் பண்ணை பார்வையாளர்களுக்கு பல்வேறு வசதிகளை வழங்குகிறது.
சமூக வலைத்தளங்களில் வைரலாகி வரும் இந்தத் தோட்டத்தின் காணொலிகளைப் பார்த்து அனைவரும் இது உண்மையா? என்று ஆச்சரியமாகக் கேட்டு வருகின்றனர். இந்தத் தோட்டம் ஆராய்ச்சி நோக்கத்துக்காக உருவாக்கப்பட்டது. ஆனால் இன்று மிகப் பெரிய சுற்றுலாத் தலமாக இது மாறிவிட்டது. (ஏ-இ)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தையின் தேவைகளை நிறைவேற்றி மகிழ்வீர்கள். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**இடபம்:** தாயின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். பிள்ளைகளின் தேவைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்று வீர் கள். சிலருக்கு எதிர்பாராத பணவர வுக்கு வாய்ப்பு உண்டு. மனவருத்தம் ஏற்படலாம்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளை தொடங்குவது சாதகமாக முடியும். சுபநிகழ்ச்சி ஒன்று ஏற்பாடாகும். சிலருக்கு வீண் அலைச்சல் ஏற்படவும் அதனால் உடல் அசதி உண்டாகவும் கூடும்.

**கடகம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியங்கள் அனுகூல மாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். பராமரிப்புப் பணிகளில் சுறுசுறுப்பாக ஈடுபடுவீர்கள்.

**சிம்மம்:** உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிகளுக்கு ஒத்துழைப்புத் தருவார். தேவையற்ற விவாதங்களைத் தவிர்க்கவும்.

**கன்னி:** சகோதரர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். எதிர்பார்த்துக் காத்திருந்த நல்ல செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. பேசும்போது பொறுமை அவசியம்.

**துலாம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உள்ளது. ஆனால், சிலருக்கு அதிகப்படியான செலவுகளால் கடன் வாங்க நேரிடும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். கவனம் தேவை.

**விருச்சிகம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். ஆதாயம் கிடைப்பதுடன் செலவுகளும் ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் விலகும். மகிழ்ச்சி உண்டாகும். ஒத்துழைப்பால் முயற்சி சாதகமாகும்.

**தனுசு:** மனதில் இனம் தெரியாத சோர்வு ஏற்படக்கூடும். செலவுகள் ஏற்படும். எதிர் பார்த்த பணம் கிடைப்பது தாமதமாகும். உங்கள் தேவையை அறிந்து செய்யும் உதவி ஆறுதல் தரும்.

**மகரம்:** ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சிலருக்கு திடீர் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். வெளியில் செல்லும்போது கவனமாக இருக்கவும்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபடவேண்டாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிலருக்கு குடும்பம் தொடர்பான பணிகளுக்காக சற்று அலைச்சல் ஏற்படும்.

**மீனம்:** மன உறுதியுடன் செயற்படுவீர்கள். எதிர்பாராத பணலாபம் உண்டாகும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. மகிழ்ச்சி உண்டாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## எப்படித்தான் நம்புவதோ?

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்குப் பயணமாகவிருக்கும் நிலையில், 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நடைமுறைப்படுத்தவேண்டும் என்ற கோரிக்கைகள் தமிழ்த் தரப்புகள் சிலவற்றிடம் இருந்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதங்கள் மூலம் அனுப்பப்பட்டுள்ளன. சில தரப்புகள் 13ஆம் திருத்தத்தை எதிர்க்கும் நிலையில், வேறுசில தரப்புகள் அதனை ஆதரிக்கின்றன. இன்னும் சில தமிழ்த் தரப்புகளோ இது விடயத்தில் மதில்மேல் பூனையாக தம் முடிவை அழுத்தம் திருத்தமாகச் சொல்லத் தயங்குகின்றன. 13ஆவது திருத்தம் என்ற விடயத்திலேயே பல கோணங்களில் செயற்பட்டு ஒத்தமுடிவுக்கு வரத்தெரியாத இந்தக் கட்சிகள் எப்படி தமிழர்களுக்கு நிரந்தரத் தீர்வைப் பெற்றுத்தருவார்கள் என நம்புவது?

கடந்த தேர்தல்களில் தமிழ்த் தேசியத்தை முன்னிறுத்தி தமிழர் பிரதேசங்களில் கூட்டமைப்பாகவும், தனித்தனியாகவும் போட்டியிட்ட கட்சிகள் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பான அதிகபட்ச அதிகாரப்பகிர்வுடன் கூடிய சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வே தங்களின் இலக்கு என்று வாக்குறுதியளித்திருந்தன. தேர்தலில் அந்தக் கட்சிகளுக்கு வாக்களித்த தமிழ் மக்களும் அதற்கான ஆணையையே வழங்கியிருந்தனர். சட்டவாட்சியைச் சற்றும் மதிக்காத இலங்கை போன்ற நாட்டில் எப்போது வேண்டுமானாலும் மீளப்பறிக்கப்படக்கூடிய 13ஆவது அரசியல் திருத்தம் போன்ற ஒன்றின் மூலம் தமிழ் மக்களுக்கு எதுவும் கிடைத்துவிடப்போவதில்லை. 13ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கும் மேலாக, மீளப்பெற்றுக் கொள்ளமுடியாத அதியுச்ச அதிகாரப்பகிர்வு ஒன்றே இலங்கைத் தீவில் தமிழ் மக்களின் இருப்பைத் தக்கவைக்கும் என்பதும் அனைவரும் அறிந்த நிதர்சனம். இந்தநிலையில், தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று கூறிக்கொள்ளும் தமிழ் அரசியல் கட்சிகளும் அரசியல் தலைவர்களும்தங்களின்சுயநல அரசியல் விருப்புகளைத் தமிழ் மக்களின் மீது திணிக்க முயல்கின்றனரோ என்ற சந்தேகம் எழுகின்றது.

அரசியல் தீர்வுக்காக தமிழ் மக்கள் சர்வதேசத்தை நம்பியிருக்கும் நிலையில் சர்வதேசத்தின் அழுத்தத்தின் ஊடாகவே இலங்கையைத் தீர்வு விடயத்துக்கு உந்தித் தள்ள முடியும் என்ற பின்னணியில் தமிழ் மக்கள் பிரதிநிதிகளுக்கு தங்களின் இலக்கு எதுவென்ற திட்டம் இருத்தல் அவசியம். வாய்ப்புகள் எப்போதும் கிடைக்காது என்பதால் கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்தி தமிழ்த் தரப்பு அதியுச்ச அதிகாரப் பகிர்வைப் பெறவே முயலவேண்டும். ஆனால், தற்போதுள்ள தமிழ்த் தலைமைகளிடம் தமிழர்களின் தீர்வு விடயத்தை எவ்வாறு கொண்டு நகர்த்துவது என்ற எந்தத் திட்டமும் இல்லை என்றே தெரிகின்றது. அவ்வப்போது என்ன கிடைக்கின்றதோ அதைமட்டும் பற்றிக் கொண்டு காலத்தைக் கடத்திவிட முயல்வதுடன் தமிழர் தீர்வு விடயத்திலும் குட்டையைக் குழப்பிக்கொண்டிருக்கின்றன.

தமிழ் அரசியல் தலைமைகளின் இலக்கற்ற இந்தப் போக்கால் தமிழர் விடயத்தில் சர்வதேசத்தால் கிடைக்கக் கூடிய அனுகூலங்கள் கிடைக்காமல் போவதற்குரிய வாய்ப்புகளே அதிகம். அண்மையில் தமிழர் தரப்புகளைச் சந்தித்த சர்வதேச இராஜதந்திரிகளும் இதையே சுட்டிக்காட்டியுள்ளனர். சர்வதேசத்தின் பக்கபலத்தை நாடுவதற்கு முன்னர் தமிழ் அரசியல் தலைமைகள் தங்களின் இலக்குத் தொடர்பில் தெளிவுக்கு வரவேண்டும். ஒவ்வொரு தரப்பும் தங்களின் விருப்பத்துக்கு ஏற்ப முடிவுகளை எடுத்து அதைத் தமிழ் மக்களின் விருப்பாகக் காட்டிக்கொள்ள முயலாது தமிழ் மக்களின் கருத்துகளை அறிந்து தமிழருக்கான அரசியல் தீர்வை வரையறுத்துக் கொள்ளவேண்டும். கடிதங்களை எழுதுவதற்கும் – மேடைப் பேச்சுகளுக்கும் முன்னதாக தமிழ் தலைமைகள் செய்யவேண்டியது அதுவே. அதைவிடுத்து தமிழ் மக்களை மடையர்களாக்க முயலக்கூடாது.

### நாளொரு நல்வார்த்தை

"பணம், பணம் என்று மனிதர்கள் உலகத்தில் ஓடி உழைக்கிறார்கள், ஆனால் நிம்மதியை தொலைத்து விடுகிறார்கள்"

– சார்லி சப்ளின்



# மக்களின் வரிப்பணத்தை வீணடித்து தரமற்ற மருந்துகள் இறக்குமதி

## மருத்துவர்களின் தொழிற்சங்கம் சீற்றம்



**கொழும்பு, ஜூலை 19**

**மக்களின் வரிப்பணத்தை முறைகேடாகப் பயன்படுத்தி தரமற்ற மருந்துகளை நாட்டுக்கு இறக்குமதி செய்தமை தொடர்பில் சுகாதார அமைச்சு மௌனமாக இருப்பது ஏற்புடையதல்ல என்று மருத்துவ மற்றும் சிவில் உரிமைகள் தொடர்பான மருத்துவர்களின் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.**

இதுகுறித்து அந்தச் சங்கத்தின் தலைவர் மருத்துவர் ஜி.ஜி. சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளதாவது:-

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 64 வகையான மருந்துகள் மற்றும் சத்திரசிகிச்சைக் கருவிகள் பாவனையிலிருந்து நீக்கப்பட்டுள்ளன எனத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்ட மருந்துகளில் பெரும்பாலானவை அத்தியாவசிய மற்றும் அன்றாடம் பயன்படுத்தப்படும் மருந்துகளாகும். இவற்றுக்குச் செலவிடப்பட்ட பில்லியன் கணக்கான டொலர் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டதற்கு யார் பொறுப்பு? இது தொடர்பில் உடனடியாக விரிவான விசாரணை நடத்தப்படவேண்டும். மருந்துப் பொருள்களை இறக்குமதி செய்ய பயன்படுத்தப்பட்ட மக்களின் வரிப்பணத்தை ஊழல் அரசியல்வாதிகளிடமிருந்து மீட்டுத்தர சட்டநடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (ச-இ)

### நடப்பாண்டில் இதுவரை
## 64 வகை மருந்துகள் பாவனையில் நீக்கம்

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 64 வகையான மருந்துகள் மற்றும் சத்திரசிகிச்சைக் கருவிகள் பாவனையிலிருந்து நீக்கப்பட்டுள்ளன. சுகாதார அமைச்சின் மருத்துவ வழங்கல் பிரிவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. குறைந்த தரம் மற்றும் குற்றச்சாட்டுகள் காரணமாக அவை பயன்பாட்டிலிருந்து விலக்கப்பட்டுள்ளன.

பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்ட மருந்துகளில் பெரும்பாலானவை அத்தியாவசிய மற்றும் அன்றாடம் பயன்படுத்தப்படும் மருந்துகள் என சுகாதாரத்துறைகள் சுட்டிக்காட்டுகின்றன.

இவற்றில் பெரும்பாலான மருந்துகள் மற்றும் சத்திரசிகிச்சைக் கருவிகள் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவை அல்லது இலங்கையில் தயாரிக்கப்பட்டவை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

## அத்தியாவசிய சேவைகள் வர்த்தமானி வெளிவந்தது

சேவைகள் சிலவற்றை அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தி விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. இந்த வர்த்தமானி அறிவித்தல் நேற்று செவ்வாய்க்கிழமை நடைமுறைக்கு வரும்வகையில்வெளியிடப்பட்டது. மின்சக்தியுடன் தொடர்புடைய சேவைகள், பெற்றோலிய உற்பத்தி, மருத்துவமனை, சிகிச்சை நிலையங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய சேவைகள் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. (ச-இ)

நாளை

20.07.2023
வியாழக்கிழமை
ஆடி 04

சுபநேரம் : 07.31 - 09.01
ராகுகாலம் : 01.31 - 03.01

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருந்தூரில் வழிபாட்டுரிமை பறிப்பு: ம. உ. ஆணைக்குழுவில் முறைப்பாடு

**முல்லைத்தீவு, ஜுலை 19**

**முல்லைத்தீவு - குருந்தூர்மலையில் சைவ வழிபாட்டுரிமை மறுக்கப்பட்டமை மற்றும் ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்பட்டமை ஆகியவை தொடர்பில் வவுனியாவிலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.**



வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர்களான து.ரவிகரன், க.சிவநேசன், ஆதிஜயனார் ஆலய பரிபாலனசபையினர் மற்றும் சமூகச் செயற்பாட்டாளர்களான அ.பீற்றர் இளஞ்செழியன், இ.ஜெக தீசன், ஊடகவியலாளர் வி.சரவணன் ஆகியோரால் இந்த முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டில் குருந்தூர்மலை யில் கடந்த 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று, நீதிமன்ற உத்தரவுக்கமைய சைவத்தமிழ் மக்களால் பொங்கல் வழிபாடு ஏற்பாடு செய்யப்பட்டது. இதன்போது பௌத்த துறவிகளுடன் சிங்கள வர்கள் இணைந்து பொங்கல் வழிபாட்டுக்குக் குழப்பம் விளைவித்த துடன் கடமையில் ஈடுபட்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரால் சப்பாத்துக் கால்களால் கற்பூரதீபம் மிதித்து அணைக்கப்பட்டுள்ளது.

வழிபாடுகளை மேற்கொண்ட மக்களும், மக்கள் பிரதிநிதிகளும், சமூகச் செயற்பாட்டாளர்களும் பொலிஸாரால் பக்கச்சார்பற்ற முறையில் தாக்கப்பட்டனர்.

அத்துடன் அன்றைய தினம் செய்தி சேகரிப்பில் ஈடுபட்டிருந்த ஊடகவியலாளர்களும் பொலிஸாரின் அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டனர். இதுதொடர்பில் நீதி வழங்க வேண்டும் - என்றுள்ளது. (ச-18)

# வீடொன்றின் மீது நேற்றிரவு பெற்றோல்குண்டுத் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜுலை 19

அச்சுவேலி, பத்தமேனியிலுள்ள வீடு ஒன்றின் மீது நேற்றிரவு 9.20 மணியளவில் பெற்றோல் குண்டுவீசி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

முகத்தை துணியால் மறைத்தவாறு இரண்டு மோட்டார்சைக்கிளில் வந்த ஆறு பேர் குறித்த வீட்டின் ஜன்னல், கதவு என்பவற்றை அடித்து உடைத்து பெற்றோல் குண்டுவீசி பல பொருள்களை எரித்துச் சேதமாக்கியுள்ளனர்.



தாக்குதலுக்கு உள்ளான வீட்டிலிருந்த 42 வயதுடைய பெண்ணொருவர் தாக்குதலில் காயமடைந்து அச்சுவேலி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-26)

## நாவாந்துறை...

பெற்ற மோதல் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டின் கீழ் இருவர், பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டனர்.

கால்பந்தாட்டப் போட்டியொன்றில் ஏற்பட்ட முறுகலைத் தொடர்ந்து நாவாந்துறை வடக்கு மற்றும் தெற்கு கிராமங்களைச் சேர்ந்த இரு குழுக்களே இந்தக் கைகலப்பில் ஈடுபட்டன. விசேட அதிரடிப்படையினர் களமிறக்கப்பட்டே நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பில், யாழ்ப்பாணம் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் நடத்திய விசாரணைகளின் அடிப்படையில் நேற்றைய தினம் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-26)

## நீதிபதி...

மன்ற உறுப்பினர் சரத் வீரசேகர வெளிப்படுத்திய கருத்துகளுக்கு நாடாளுமன்றத்தில் நேற்றுக் கடும் கண்டனம் தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன்.

முல்லைத்தீவு, குருந்தூர்மலையில் நீதிபதி சரவணராஜா களஆய்வை மேற்கொண்டபோது, தன்னை அறிமுகப்படுத்திய வீரசேகர சில கருத்துகளைக் கூறமுற்பட்டார். இதைத் திட்டவட்டமாக ஏற்கமறுத்த நீதிபதி, 'நீதிமன்ற நடவடிக்கைகளின்போது எவரும் கருத்துக்கூற முடியாது' என்று தெரிவித்தார்.

இதையடுத்து, இந்தச் சம்பவத்துக்குப் பின்னரான நாடாளுமன்ற அமர்வில் நீதிபதி சரவணராஜாவுக்குக் கண்டனம் தெரிவித்த வீரசேகர, தமிழ் நீதிபதிகள் இந்த நாடு சிங்கள - பௌத்த நாடு என்பதை விளங்கிக் கொள்ளவேண்டும் என்று வலியுறுத்தினார்.

அத்துடன், தமிழ் நீதிபதிகளின் அதிகாரத்தையும் வீரசேகர கேள்விக்கு உட்படுத்தினார். இவற்றுக்கே நாடாளுமன்றத்தின் நேற்றைய அமர்வில் கடும் கண்டனம் தெரிவித்தார் சிறீதரன்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் நீதிபதிகள் தமது அதிகார வரம்புக்குட்பட்டு நியாயமான தீர்ப்புகளை வழங்கமுடியாதென்ற நாடாளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகரவின் கருத்துகள் சரியானவை என்றால், இந்த நாட்டின் நீதித்துறையை முழுமையாக சிங்களமயப்படுத்தப் போகிறீர்களா? என்று கேட்க வேண்டியிருக்கின்றது. உரிய அதிகாரங்கள் தடுக்கப்பட்டு, தமிழ் நீதிபதிகளும், நீதிமன்றத் தீர்ப்புகளும் தொடர்ச்சியாக அவமதிக்கப்படுகின்றமை இந்த நாட்டின் அகோரமான இனவாதச் செயலாகவே தென்படுகிறது.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி சரவணராஜாவின் கருத்துகளை மறுதலித்து, இந்த உயரிய சபையில் சரத்வீரசேகர பதிவுசெய்த இனவாதக் கருத்துகளுக்கு எனது வன்மையான கண்டனங்களைத் தெரிவிக்கிறேன். தயவுசெய்து இந்த நாட்டின் நீதித்துறையையாவது சுயாதீனமாக இயங்கவிடுங்கள் - என்றார். (அ-ம-113)

## எதிர்வரும்...

பிராந்தியத்துக்கான உபதலைவர் மார்ட்டீன் ரைசர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கொழும்பில் நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ள அவர், இந்தச் சந்திப்புத் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடன் மறுசீரமைப்பின் முன்னேற்றம் மற்றும் நாட்டின் பொருளாதார மீட்சிக்கு தனியார் முதலீடுகளை அதிகரிப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய முக்கியமான சீர்திருத்தங்கள் குறித்து இந்தச் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டது. இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு அடுத்துவரும் மாதங்கள் மிகவும் தீர்க்கமானவை. உலக வங்கி இலங்கைக்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஆதரவளிக்கத் தயாராகவுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - இலங்கையின் மீட்சி குறித்து தனியார் துறையினருடனும் மார்ட்டீன் ரைசர் முக்கியமான சந்திப்புகளில் ஈடுபட்டுள்ளார். சுற்றுலாத்துறை, தகவல் தொழில்நுட்பம் மற்றும் விவசாயம் போன்ற துறைகளில் வேலை வாய்ப்புகளை உருவாக்க உதவும் கொள்கைகள் குறித்து தனியார் துறையினருடனான சந்திப்பில் அவர் வலியுறுத்தியுள்ளார். (அ-ம)


## கண்ணீர் அஞ்சலி

**எமது பாடசாலையின் முன்னாள் அதிபர்**
**வேலாயுதம் சிவசக்திவேல்**
அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு துயருற்றிருக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



தோற்றம் : 10.04.1968
மறைவு : 17.07.2023

**பாடசாலை சமூகம்,**
**யா/ ஆனைக்கோட்டை**
**பாலசுப்பிரமணிய வித்தியாலயம், ஆனைக்கோட்டை.** (CS/25559) AH-1



## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு 05 10 1948



உதிர்வு 19 06 2023

**அமரர் அருணாதேவி விஜயகுமார்**

கண் இமைக்குள் வைத்து நாம் வாழ
வழி அமைத்துக் கொடுத்தீர்கள் அம்மா!
ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்ட எம் அன்புத் தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

கடந்த 19.06.2023 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் மறைவுச் செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள் புரிந்த அனைவருக்கும் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் இல்லத்தில் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (19.07.2023) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(CS/51306) AH-

021 221 6962 குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழ...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யுள்ள 2 ஆயிரத்து 678 பேர் இலங்கை பிறப்புச் சான்றிதழையும் தேசிய அடையாள அட்டையையும் வைத்திருக்கின்றனர். இவர்கள் சென்னையிலுள்ள இலங்கைத் துணைத்தூதரகத்தில் சகல நாடுகளுக்குமான கடவுச் சீட்டுகளை விரைவில் பெற்றுக்கொள்ள முடியும். அதற்குரிய ஏற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-6)


## தேவை

**யாழ்நகரில் இயங்கும் கலர்லாப்புடன் கூடிய புகைப்பட நிலையம் ஒன்றிற்கு கீழ்வரும் வேலைக்கு ஆட்கள் தேவை.**
**ஆண்கள்** மட்டும் விண்ணப்பிக்கவும்

1. **காசாளராக** கடமை புரிவதற்கு ஒருவர் தேவை. விண்ணப்பிப்பவர் வாடிக்கையாளருடன் இன் முகத்துடன் அன்பாக பழகுபவராகவும் இதர ஊழியர்களுடனும் அன்போடு பழகி வேலைகளை திறம்பட ஒழுங்குபடுத்தி செயற்படுத்தக் கூடிய வல்லவராகவும் இருத்தல் வேண்டும்.
2. **பிறின்டிங், புகைப்படம்பிடித்தல், கிறபிக்டிசைனிங்** போன்ற வேலைக்கு ஆட்கள் தேவை **முன் அனுபவம் உள்ளவர்களும் பழக விரும்புபவர்களும்** விண்ணப்பிக்கலாம்.

**தங்கள் சுய விவரக்கோவையுடன் தொலைபேசி இலக்கத்தையும் குறிப்பிட்டு தேசிய அ.அ. போட்டோ பிரதியையும் இணைத்து மே.பா.இல. இற்கு 31.07.2023 இற்கு முன் நேரில் / தபால் மூலம் அனுப்பிவைக்கவும்.**

**விளம்பர இல. 1047,**
**உதயன் பணிமனை,**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

(cs.25560) (N.1)


## மரண அறிவித்தல்



தோற்றம் 08 . 07 . 1961 — மறைவு 18 . 07 . 2023

### திருமதி இராஜசிங்கம் நிர்மலாதேவி (சாந்தி)

ஓடக்கரை வீதி, சங்கானையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராஜசிங்கம் நிர்மலாதேவி நேற்று (18.07.2023) செவ்வாய்க் கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமநாதன் ஆனந்தலக்ஷ்மி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராஜரத்தினம் பகவதியம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இ.இராஜசிங்கத்தின் அன்பு மனைவியும், ஜினோத், சவீஷன் ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி கோணேஸ்வராதேவி (கனடா), திருமதி விக்னேஸ்வராதேவி, காலஞ்சென்ற ஈஸ்வரன் மற்றும் சுசிலாதேவி, திரு.ரமேஸ் (லண்டன்) ஆகியோரின் சகோதரியும், திரு.கந்தசாமி (கனடா), காலஞ்சென்ற சிவபரன், திருமதி.சுகந்தி (லண்டன்), திரு.கு[illegible]ரட்ணம், திருமதி சரோஜினிதேவி, திருமதி லலிதாதேவி (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.07.2023) வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: பிள்ளைகள்**
**மற்றும் குடும்பத்தினர்.**

(CS 25561) A-1


## வட இலங்கை சங்கீத சபை
## மருதனார்மடம் - சுன்னாகம்
### 2023 ஆம் ஆண்டுக்கான எழுத்துப் பரீட்சைகள் பிற்போடல்

வட இலங்கை சங்கீத சபையின் இவ்வாண்டு ஜூலை மாதம் 29, 30 ஆம் திகதி (சனி மற்றும் ஞாயிறு) நடைபெறவிருந்த எழுத்துப் பரீட்சைகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது. இப் பரீட்சைகள் யாவும் வழங்கப்பட்ட நேர அட்டவணைக்கு அமைவாக ஆகஸ்ட் மாதம் 26, 27 ஆம் திகதி (சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் ) நடைபெறும்.

பொ.இரவிச்சந்திரன்
தலைவர், வட இலங்கை சங்கீத சபை,
மருதனார்மடம் - சுன்னாகம்

# மரண அறிவித்தல்

## தம்பிராசா தருமரத்தினம்
### (உரிமையாளர்-சென்ரல் மோட்டோர்ஸ், யாழ்ப்பாணம், சங்கர் மோட்டோர்ஸ், சுன்னாகம்)



தோற்றம் 17.05.1957 — மறைவு 18.07.2023

சண்டிலிப்பாய் மத்தி சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா தருமரத்தினம் அவர்கள் நேற்று (18.07.2023) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், இராசேந்திரம் அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், சரோஜாதேவி அவர்களின் பாசமிகு கணவரும், கஜரதன் (சென்ரல் மோட்டோர்ஸ்), பத்மாஜினி, சுபாசினி (மாணவி - ஊவா வெல்லச பல்கலைக்கழகம்), சங்கயன் (சங்கர் மோட்டோர்ஸ்), சிவதர்சினி, கஜரூபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், விதுஷா, டினேஸ் (LOLC Finance) ஆகியோரின் அன்பு மாமனாரும், டிவிக்சனின் அன்புப் பேரனும், பாலசுப்பிரமணியம், சிவபாக்கியம், அமரர் சிவகுருநாதன், சிவராசா, குணராசா, கமலாதேவி, விமலா தேவி, மல்லிகாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், விக்கினேஸ்வரன் - கவிப்பிரியா, சிவகாந்தன் - தமிழ்ச்செல்வி மற்றும் புஸ்பராணி, அமரர் நாகமுத்து, கலாவதி, சரோஜாதேவி, வேபி, நாகராசா, சிவசக்திநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.07.2023) வியாழக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சண்டிலிப்பாய் மத்தி,**
**சண்டிலிப்பாய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 25564) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு





கடந்த 05.07.2023 அன்று
சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவி

## அமரர் தவமணி செல்லத்துரை

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (20.07.2023) வியாழக்கிழமை காலை 06.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

என்றும் உங்களின் நினைவுகளுடன் வாழும்
குடும்பத்தினர் 071 151 7448
இல.98, சுன்னாகம் மேற்கு,
சுன்னாகம்.

(cs.51310) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதன் பொய்கை





இன்றைய நாள் (1947 ஜூலை மாதம் 19 ஆம் திகதி) விபுலானந்த அடிகள் இறைவன் திருவடியை அடைந்த நாள். அந்த மகானை நினைவு கூரும் பொருட்டு இந்தச் சிறு குறிப்பு பிரசுரமாகின்றது.

"இருமை வகைதெரிந்து ஈண்டுஅறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு."
-வள்ளுவர்

பேராசிரியர். எஸ். சிவலிங்கராஜா



# இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ்ப்பேராசிரியர் விபுலானந்தஅடிகள்

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த காரைதீவு என்னும் கிராமத்திலே 1892 ஆம் ஆண்டு விபுலானந்தர் பிறந்தார். இவருக்கு மயில்வாகனன் என்னும் பெயர் கதிர்காமக்கந்தன் ஆலயத்திலே வைத்துச் சூட்டப்பட்டது என்பர். காரைதீவு மெதடிஸ்த மிஷன் பாடசாலையிலே ஆரம்பக் கல்வியைப் பெற்ற இவர் கல்முனை மெதடிஸ்த மிஷன் ஆங்கிலப் பாடசாலையிலே சேர்ந்து படித்தார். இங்குதான் அடிகளார் நன்றியுடன் நினைவு கூரும் குஞ்சுத்தம்பி ஆசிரியரிடம் மூன்று ஆண்டுகள் தமிழும் ஆங்கிலமும் பயின்றார். பின்னர் புனித மிக்கேல் கல்லூரியிலே ஆங்கிலக் கல்வியை ஆங்கிலேய வண.பிதாக்களிடம் பெற்றார். இங்கு கற்று 1906ஆம் ஆண்டு கேம்பிறிட்ஜ் ஜூனியர் தேர்விலும், 1908ஆம் ஆண்டு கேம்பிறிட்ஜ் சீனியர் தேர்விலும் சித்திபெற்றார்.

பாடசாலைக் கல்வியை வரன்முறையாகப் பெற்று வந்த அடிகளார் விடுமுறை நாள்களிலே காரைதீவுப் பிள்ளையார் ஆலயப் பூசகராக விளங்கிய தென்புலோலி வைத்தியலிங்க தேசிகரிடம் தமிழ் இலக்கிய, இலக்கணங்களைக் கற்றார். புலோலி வைத்தியலிங்க தேசிகர், உடுப்பிட்டிச் சிவசம்புப்புலவரின் மாணாக்கர் பரம்பரையிலே வந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. கல்முனை கத்தோலிக்கப் பாடசாலையிலே பணியாற்றிய காலத்திலே கொழும்பு ஆசிரிய பயிற்சிக் கல்லூரிக்குத் தெரிவு செய்யப்பட்டு, ஆசிரியப் பயிற்சி பெறுவதற்காக அங்கு சென்றார். அங்கு தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றிய தென்கோவை கந்தையாபிள்ளையிடம் தனிப்பட்ட முறையிலும் தமிழ் நூல்களைப் பாடங்கேட்டு வந்தார். பண்டிதர் கந்தையாபிள்ளை, சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரின் மாணவன் என்பது குறிப்பிடத்தக்கது. நல்லூர் முதலியார் சிற்றம்பலம், வதிரி சி.தாமோதரம்பிள்ளை ஆகியோரிடமும் சங்க இலக்கியங்களையும் இலக்கண நூல்களையும் இடையிடையே பாடங்கேட்டு வந்தார் என்ற பதிவுகள் உள்ளன.

ஆசிரிய பயிற்சியைக் கொழும்பிலே முடித்தபின்னா மட்டக்களப்பு மிக்கேல் கல்லூரியிலே 1913ஆம் ஆண்டு ஆசிரியராகச் சேர்ந்து கொண்டார். இக்காலப் பகுதியிலே 'மதுரைத் தமிழ்ச்சங்கத்தால் நடத்தப்பட்ட பண்டிதர் பரீட்சையிலே சித்தியெய்திய இலங்கையின் முதல் பண்டிதர்' என்னும் மதிப்புக்குரியவரானார்.

லண்டன் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானப் பட்டப் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியெய்தினார். பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர், விஞ்ஞான டிப்ளோமா, பண்டிதர், லண்டன் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானப் பட்டதாரி முதலான புலமைப் பின்னணியோடு யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியிலே ஆசிரியர் பணியில் இணைந்தார்.

அந்தக்காலத்து ஈழத்துச் சைவத்தமிழ்ப் பெரியோர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபர் பதவியை 1920ஆம் ஆண்டிலே ஏற்றுக்கொண்டார்.

மானிப்பாய் இந்துக்கல்லூரியிலே அதிபராகப் பணியாற்றிய காலத்திலே மெல்ல மெல்ல அவரது உள்ளம் துறவறத்தின்பாற் செல்லத் தொடங்கியது. இராமகிருஷ்ண சங்க மடத்தில் இணைந்து 1924 இல் சந்நியாச தீட்சை பெற்று 'விபுலானந்தர்' ஆனார். இலங்கையில் உள்ள இராமகிருஷ்ண மிஷன் பாடசாலைகளின் முகாமையாளராக 1925ஆம் ஆண்டிலே நியமிக்கப்பட்டார்.

1931ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்பட்டபோது அதன் முதற் தமிழ் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். இமாலயத்தில் அமைந்திருந்த மாயாவதி ஆச்சிரமத்தில் இருந்து வெளிவரும் 'பிரபுத்தபாரதம்' என்னும் சஞ்சிகையின் ஆங்கில இதழுக்கு ஆசிரியராகப் பணியாற்றுவதற்கு முன்னர் மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலய அதிபராகவும் முகாமையாளராகவும் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கை அறிஞர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க 1943ஆம் ஆண்டு இலங்கை பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியராகப் பதவியேற்றார். இலங்கையின் முதற் தமிழ்ப் பேராசிரியர் என்ற பெருமைக்கு உரியவரானார். வாழையடி வாழையாக இவரது மரபு இன்று வரை தொடர்கின்றது. மிகச் சிறந்த ஆய்வாளராக, நல்ல கவிஞராக, அற்புதமான மொழி பெயர்ப்பாளராக, போற்றுதற்குரிய மனிதநேயப் பண்பாளராக, பதிப்பாளராக விளங்கிய விபுலானந்தர் 1947 ஆம் ஆண்டு ஜூலை 19ஆம் திகதி இறைவனடி சேர்ந்தார்.

சிறந்த சமயப்பற்றாளராக விளங்கிய இவரின் ஆக்கங்கள் தமிழ் இலக்கிய வரலாற்றிலே, குறிப்பாக ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றிலே நின்று நிலைக்கும் தன்மை வாய்ந்தவை.

இவரின் குன்றா உழைப்பாலும், குறையா ஊக்கத்தினாலும் உருவான 'யாழ் நூல்' ஆய்வுலகிலே அழியா புகழுடையதாகும். மிகச்சிறந்த கவித்துவ ஆளுமையுடைய அடிகளார், பாரதியாரின் கவிதைகளை அறிவுலகிற்கு எடுத்துச் சென்றவர் என்பது முக்கியத்துவம் வாய்ந்தது. பழந்தமிழ் இலக்கிய இலக்கணங்களிலே ஆற்றல் மிக்கவராகவும், பன்மொழிப்பாண்டித்தியம் பெற்றவராகவும் விளங்கிய அடிகளார் மொழி, கலை இலக்கியத்திறனாய்வுத் துறைகளை நவீன போக்குக்குத் திசை திருப்பிய முன்னவர் என்ற பெருமைக்கு உரியவர். இலங்கை பல்கலைக்கழகத்திலே பணியாற்றிய காலத்தில் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை மீது அன்பு பர்ராட்டிய அடிகளார், அவருக்கு எழுதிய கடிதங்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. அடிகளாரிடம் இருந்த நவீன சிந்தனைப்போக்கினை அந்தக்கடிதங்களினூடு கண்டு கொள்ளலாம். எந்தக்காலமும் மேற்கோள் காட்டக் கூடியதானதாக இவரது கவிதைகள், மொழி பெயர்ப்புக்கள் முதலியன அமைந்துள்ளன. ஈசன் உவக்கும் இன்மலர் மூன்று, கங்கையில் விடுத்த ஓலை, யூலியஸ் சீசர் ஆகிய மொழிபெயர்ப்புக் கவிதைகள் முதலான பல கவிதைகள் இவரது கவித்துவத்தைப் புலப்படுத்தி நிற்கின்றன.

பல்துறை ஆளுமைமிக்க தமிழ்ப் பேராசிரியர் சுவாமி விபுலானந்தரை அவர் மறைந்த நாளிலே நன்றியுடன் நினைவு கூருவோமாக.

புதன்பொய்கையில் உங்கள் ஆக்கங்கள் (இலக்கியம், கலை மற்றும் கலாசாரம்), இலக்கியப் படைப்புக்கள், விமர்சனங்கள், கலை கலாசார நிகழ்வுகள், நூல்வெளியீடுகள், ஆற்றுகைகள் தொடர்பான பதிவுகளை பிரசுரிக்க ஒரு வாய்ப்பு. அனுப்ப வேண்டிய முகவரி: புதன்பொய்கை உதயன், 361.கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். மின்னஞ்சல் முகவரி: puthanpoigai@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச காகிதப்பை தினம் கடந்தவாரம் (ஜூலை 12) கடைப்பிடிக்கப்பட்டது. அதை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.



# காகிதப்பையின் புத்துயிர்ப்பே பொலித்தீனுக்கான சாவுமணி!

■ ஜெயக்குமார்

உலகளாவிய ரீதியில் பிளாஸ்ரிக் பைகளின் மிதமிஞ்சிய பாவனையால் உருவாக்கப்பட்டிருக்கும் பிளாஸ்ரிக் மாசடைதலின் தீவிரத்தைக் குறைப்பதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகவே உலக காகிதப் பை தினம் ஐ.நா.வினால் கொண்டுவரப்பட்டது. அதாவது பிளாஸ்ரிக், பொலித்தீன் பைகளுக்குப்பதிலாக காகித பைகள் உபயோகிப்பதை மக்களிடையே ஊக்கப்படுத்துவதே இந்த நாளின் நோக்கமாகும். அதிகளவில் மக்களால் பயன்படுத்தப்படும் பிளாஸ்ரிக் வகையைச்சேர்ந்த பொலித்தீன் பைகள் முதன்முதலில் 1933ஆம் ஆண்டு இங்கிலாந்தில் செய்யப்பட்டன. ஆனால் 1965ஆம் ஆண்டு சுவீடன் நாட்டு நிறுவனம் ஒன்றினால் தயாரிக்கப்பட்ட பொலித்தீன் பைகள்தான் மக்கள் பாவனைக்கு அறிமுகப்படுத்தப்பட்டன. 1970இலிருந்து ஐரோப்பிய நாடுகளில் பொலித்தீன் பைகள் பாவனைக்கு வந்தன. இதையடுத்து, மிக விரைவில் உலகம் எங்கும் பொலித்தீன் பைகள் பாவனைக்குப் பரவின.

### பல்கிப்பெருகியது

மிகக்குறைந்த விலையில் வேண்டப்படக் கூடியதாகவும் கையாள்வதற்கு இலகுவானதாகவும் இருப்பதால் உலகம் முழுவதும் இவைகளின் பாவனை நாளுக்கு நாள் அதிகரித்துச் சென்றது. உலகளாவிய ரீதியில் பாவனைக்கு அறிமுகப்படுத்தப்பட்டு இரண்டு தசாப்தங்களுக்குப் பின்பு அதாவது தொண்ணூறுகளில் சுற்று சூழல் ஆர்வலர்களினால் பொலித்தீன் பை மிதமிஞ்சிய பாவனையால் சூழலுக்கு ஏற்படும் பெருந்தீங்கு பற்றிய அபாயமணி அடிக்கப்பட்டது. 1999இல் சான் பிரான்ஸிஸ்கோ நகரம் பொலித்தீன் பைகளின் பாவனைக்கு தடை விதித்த முதல் நகரமாக விளங்கியது. இதனைத் தொடர்ந்து உலகின் பல்வேறு நகரங்களும் நாடுகளும் பொலித்தீன் பைகளுக்கு தடைவிதிக்க ஆரம்பித்தன. தடை விதித்த பெரும்பாலான நகரங்கள், நாடுகள் காகிதப்பைகள்தான் பொலித்தீன் பைகளுக்கு சிறந்த மாற்றீடு என்பதை உணர்ந்து காகித பைகளின் உபயோகத்திற்கு மீளுயிர் கொடுக்கத் தொடங்கின. எனினும், கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக பொலித்தீன் பைகளின் அதிகரித்த பாவனையால் உலகளாவிய ரீதியில் சுற்று சூழலின் பாதுகாப்பு மிகப்பெரிய அச்சுறுத்தலுக்கு உள்ளாகி இருக்கின்றது என்பதும் மறுக்கப்பட முடியாத உண்மையாகும்.

பொலித்தீனுக்கு மாற்றான காகிதப்பைகள் பலநூறு நன்மைகளைத் தன்னகத்தே கொண்டிருக்கின்றன. உதாரணமாக, இந்தப் பைகள் மீள் சுழற்சிக்குரியவை, ஒரு மாதகாலத்துக்குள் பிரிகையடையக்கூடியவை, உறுதியானவை, பொலித்தீன் பைகளுடன் ஒப்பிடுகையில் காகித பைகள் சுற்று சூழலுக்குத் தீங்கு விளைவிக்காதவை, அதிக விலை கொடுத்து வேண்டப்படவேண்டிய பொருளல்ல, பறவைகள்; மற்றும் விலங்குகளுக்கு தீங்கு பயக்காதவை, கூட்டெரு தயாரிப்பதற்கு பயன்படுத்தக்கூடியவை. இவ்வாறாக ஏகப்பட்ட நன்மைகளை அடுக்கிக்கொண்டே செல்லலாம்.

உலக காகித பை தினம் உலகில் பல்வேறு வழிகளில் அனுஷ்டிக்கப்படுகிறது. அரசாங்கங்கள் மட்டுமன்றி, தனியார் நிறுவனங்களும் தொண்டு நிறுவனங்களும் இந்தத் தினத்தை கடைப்பிடிப்பதில் தீவிர ஆர்வம் காட்டிவருகின்றன. காகிதப்பைகள் தொடர்பான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஆழமாக மேற்கொள்ள வேண்டியது இன்று காலத்தேவையாக இருக்கின்றது.

**• பொலித்தீன் உள்ளடங்கலான பிளாஸ்ரிக் பாவனையின் தீய விளைவுகள் பற்றியும் காகித பைகளின் நன்மை பற்றி செயலமர்வுகள், கருத்தரங்குகள் போன்றனவற்றை நடத்தி விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.**

**• இத் தினத்தன்று பெருமளவிலான காகிதப்பைகளை மக்களுக்கு இலவசமாக வழங்குவதோடு அவற்றின் தொடர்ச்சியான பாவனையைப் பற்றி வலியுறுத்துதல்.**

**• வெகு ஜன தொடர்பு சாதனங்களில் விளம்பரங்கள் மூலம் காகித பை பாவனை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல்**

**• அரச தனியார் ஊழியர்கள் இத்தினத்தன்று பேருந்து நிலையங்கள், புகையிரத நிலையங்கள், பொதுப்பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் போன்ற இடங்களில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருள்களை அகற்றும் பணியில் ஈடுபடல்.**

**• பொலித்தீனை கட்டுப்படுத்தி காகித பை உபயோகத்தை அதிகப்படுத்தும் கருத்துக்களை வலியுறுத்தும் வாசகத்தை உருவாக்கும் ஓவியப் போட்டிகளை, பேச்சுப் போட்டிகளை நடத்துதல்.**

**• வீடு வீடாக சென்று இலவசமாக காகித பைகளை மக்களுக்கு வழங்கி அதன் முக்கியத்துவத்தைப் பற்றிக் கூறல்.**

**• வீடுகளில் காகிதப்பைகளை எவ்வாறு இலகுவாக செய்யலாம் என்பதைப்பற்றிய செயன்முறைகளை வெகுஜன தொடர்பு சாதனங்கள் மூலமாக அறிமுகம் செய்தல்.**

**• வர்த்தக ரீதியில் மக்களால் விரும்பப்படக்கூடிய கவர்ச்சியான காகிதப் பைகளை தயாரிப்பது தொடர்பான தகவல்களை வெகுஜன தொடர்பு சாதனங்கள் மூலம் தெரியப்படுத்துதல் உள்ளிட்ட பொறிமுறைகள் அரச மயப்பட்டமாக தேசிய ரீதியில் முன்னெடுக்கப்படும் பட்சத்தில் நாம் பொலித்தீனின் ஆபத்திலிருந்து ஓரளவேனும் விலகியிருக்கலாம்.** ■

# மாணவர்களை வளப்படுத்திய 'ஐசக்'கின் இளையோர் நிகழ்வு!

**'ஐசக்' (AIESEC) என்பது உலகளாவிய ரீதியில் 120க்கும் மேற்பட்ட நாடுகளில் இளைஞர்களின் தலைமைத்துவத்தை மேம்படுத்தும் நோக்காக இயங்கிவரும் ஒரு தன்னார்வ இயக்கமாகும். இலங்கையிலும் அரசாங்க** மற்றும் தனியார் துறை கல்வி நிறுவனங்களிலும் 'ஐசக்' அமைப்பானது வெற்றிகரமாக இயங்கிவருகின்றது. இதன் ஒரு பகுதியாக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கடந்த மூன்று வருடங்களாக இந்த அமைப்புச் செயற்படுகின்றது. இந்த அமைப்பினரால், கடந்த வருடம் கிளிநொச்சியில் மேற்கொள்ளப்பட்ட 'வட் இவ்' எனும் நிகழ்ச்சித்திட்டமானது பாடசாலை மாணவர்களிடையே பலத்த வரவேற்பைப் பெற்றிருந்தது.

அந்த அமைப்பினரின் அடுத்தகட்ட நிகழ்ச்சித்திட்டமாக 'யுத் ஸ்பீக் போரம்' எனும் நிகழ்வானது கடந்த ஜூன் மாதம் 24ஆம் திகதி காலை 9 மணி அளவில் யாழ்.பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட ஹூவர் மண்டபத்தில் மிகவும் பிரமாண்டமான முறையில் நடைபெற்றது. யுத் ஸ்பீக் போரம் என்பது இளைஞர் யுவதிகளை ஒன்றிணைத்து நாடளாவிய மற்றும் உலகளாவிய சமூக ரீதியான பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றுக்கான தீர்வை இளைஞர் சமுதாயத்திடமிருந்து பெற்றுக்கொள்வதேயாகும்.

அவ்வகையில் இந்த நிகழ்வானது ஐ.நா. சபையின் நிலைபேண்தகு குறிக்கோள்களில் ஒன்றான ஆரோக்கியமான உணவு மற்றும் மகிழ்ச்சியான மனநிலை எனும் தலைப்புகளை மையப்படுத்தி நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் சி.சிறீசற்குணராஜா கலந்து சிறப்பித்து நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். மற்றும் கௌரவ விருந்தினராக ரில்கோ விருந்தினர் விடுதியின் உரிமையாளர் திலக் கலந்து சிறப்பித்தார். நிகழ்வில், யாழ். போதனா மருத்துவமனையின் பணிப்பாளரான தங்கமுத்து சத்தியமூர்த்தி 'எதிர்காலத் தலைவர்களாகிய இன்றைய இளைஞர்களுக்குத் தேவையான தலைமைத்துவப் பண்புகள்' எனும் தலைப்பிலும் மருத்துவர் ஸ்ரீபவன் கணேசமூர்த்தி





'போஷாக்குக் குறைபாடுகளும் நிவர்த்தி செய்ய உதவும் எமது பாரம்பரிய உணவுகளும்' எனும் தலைப்பிலும், யாழ்ப்பாணம் ரோஸ்ட் மாஸ்டர் சங்கத்தின் தலைவரும், இளைஞர் யுவதிகளின் தலைமைத்துவத்தை விருத்திசெய்ய பல்வேறு வழிகளில் நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொண்டு வரும் அன்பழகன் 'உள ஆரோக்கியத்துக்கு அத்தியாவசியமான உடற்பயிற்சிகள்' எனும் தலைப்பிலும் மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட மாணவரான சுஜன் சுகுமாரன் 'சமகால இளைஞர்களின் உள பிரச்சினைகளும் அவற்றிற்கான தீர்வுகளும்' என்ற தலைப்பிலும் கலந்துரையாடி நிகழ்வுக்கு அணி சேர்த்தனர்.

செம்முகம் ஆற்றுகைக் குழுவினரால் செயற்படுத்தப்பட்ட 'வெற்றுக் காகிதங்கள்' என்ற களஆற்றுகையும், நிகழ்ச்சியின் இறுதியாக நடைபெற்ற சிரிப்பு யோகா நிகழ்வும் பங்கேற்பாளர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது. இந்த நிகழ்வானது தமிழ் பேசும் இளைஞர் யுவதிகளை மையப்படுத்தி ஒழுங்கமைக்கப்பட்ட நிகழ்வாகும்.

இதில் பல்வேறுபட்ட சிறப்பம்சங்கள் உள்ளடங்கியிருந்ததுடன் பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவ மாணவியருக்கும் மிகவும் பயனுள்ளதாக அமைந்திருக்கும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை. நிகழ்வுக்கு உதயன் பத்திரிகை அச்சு ஊடக அனுசரணையை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. ■




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



■ பாத்திமா சபா
இரண்டாம் வருடம்
ஊடக கற்கைகள் துறை
யாழ். பல்கலைக்கழகம்

# விளிம்பின் பிடியில் ஞானசௌந்தரி நிகழ்த்துக்கலை...



கலை உணர்வு என்பது இயல்பாகத் தோன்றுவது. மனித உணர்ச்சிகளின் வடிகால்களாக அமைந்த கலைகள் ,அழகியல் சார்ந்தவை. பொதுவாக ஒரு இடத்தில் தோன்றி, தேங்கி நிலைத்து நிற்காத இந்தக்கலைகள் எந்தவிதமான இலக்கண வரைமுறைகளையும் தம்முள்ளே கொண்டவை அல்ல.

கொண்டாடுதலும் மகிழ்ந்திருத்தலுமே கலைகளின் நோக்கங்கள்.

அவ்வகையில் நாட்டார் நிகழ்த்து கலைகளில் வழிபாடு சார்ந்த கலைகளுக்கும் சடங்கு சார்ந்த கலைகளுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. ஒவ்வொரு சமூகத்தினருக்கும், ஒவ்வொரு சமயத்தினருக்கும் என சில தனித்துவமான நிகழ்த்துக்கலைகள் மரபாகப் பேணப்படுகின்றன. அத்தகைய ஒரு சமயம்சார் கலைவடிவமே, யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறையிலுள்ள மெலிஞ்சிமுனை என்கின்ற கிராமத்தில் உள்ள ஞானசௌந்தரி நாட்டுக்கூத்து என்னும் நிகழ்த்துக்கலை. இன்று அழிவின் விளிம்பை நோக்கி நகரும் ஒரு கலையாக ஞானசௌந்தரி மாறிவருகின்றது.

ஞானசௌந்தரி நாட்டுக்கூத்து கிறிஸ்தவ சமயத்தைத் தழுவிய ஒரு சமயம் சார்ந்த கலை. காலப்போக்கில் அரசியல் சார்ந்த அம்சங்களும் இந்தக் கூத்தினுள் புகுத்தப்பட்டுள்ளது. தொடர்ந்து நான்கு தலைமுறைகளாக ஞானசௌந்தரி நாட்டுக்கூத்தை மெலிஞ்சி முனை கிராம மக்கள் தங்கள் வழக்காற்றில் நிகழ்த்தி வருகின்றனர். இது கிராமப்புற உழைக்கும் மக்களின் கூட்டுப்படைப்பாகவே காணப்படுகின்றது.

அந்த மக்களின் உள்ளக் கிடக்கையையும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்துவதற்காகவே பிரதானமாக இந்த நாட்டுக்கூத்து நிகழ்த்தப்படுகின்றது. மக்கள் தங்கள் கலைத்திறனை அடையாளப்படுத்துவதற்கான வாய்ப்பினை ஞானசௌந்தரி நாட்டுக்கூத்து ஏற்படுத்தித் தருகிறது. இப்படியான தனித்துவமான அம்சங்கள் இக்கலையில் காணப்பட்டாலும் கூட தற்கால நவீன தொடர்பாடல் யுகத்தின் ஆதிக்கத்தால், ஞானசௌந்தரி நாட்டுக்கூத்து பல சவால்களை எதிர் நோக்குகின்றது.

நவ நாகரிகத்தை விரும்பும் இன்றைய தலைமுறையினர் இந்நிகழ்த்துக் கலைகளினை கேளிக்கையாகவும் வேடிக்கையாகவும் எண்ணுகின்றனர். இதனால் அடுத்த கட்ட தலைமுறையினரை நோக்கி இந்த நிகழ்த்துக் கலைகளைத் தொடர முடியாத சூழல் இன்றைய காலத்தில் உருவாகி இருக்கின்றது.

மேலும் கிராமங்களில் நிகழ்த்து கலைகளினை மேற்கொள்ளும் கலைஞர்களுக்கும் பற்றாக்குறை காணப்படுகின்றது. அவர்கள் தொழிலுக்காக வேறு ஊர்களுக்குச் சென்று அங்கேயே தங்கிவிடுதலும், வெளிநாடுகளுக்கு புலம்பெயர்தலுமே இதற்கான பிரதான காரணிகள். இதனால் ஞானசௌந்தரி நாட்டுக்கூத்தின் எதிர்காலம் கேள்விக் குறியாக்கப்படுகின்றது.

இன்றைய இளைய தலைமுறையினர் நவீன ஊடகங்களால் ஈர்க்கப்பட்டு தங்களினுடைய திறமைகளை வெளிக் கொணராமல் சோம்பேறிகளாக, வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடக்கின்றனர். இதனால் கூத்துக்கள் மீதான இளையவர்களின் ஆர்வம் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது.

நாட்டில் தற்போதைய பொருளாதாரச் சிக்கல் நிலையும் ஞானசௌந்தரி நிகழ்த்துக்கலையானது அழிவை நோக்கி நகர்வதற்கு மிகப்பிரதான காரணமாக அமைகின்றது. காரணம் ஞான சௌந்தரி நாட்டுக்கூத்தினை அரங்கேற்றம் செய்வதற்கான ஆடை அமைப்பு, அணிகலன்கள், ஒப்பனை, மேடை அலங்காரம் போன்றவற்றுக்கான செலவு பலமடங்கு அதிகரித்ததால், அவ்வளவு தொகையைச் செலவிட்டு நாட்டுக்கூத்தை மேடையேற்றப் பலரும் பின்னடிக்கின்றனர்.

கூத்துகள் இரவிரவாக ஆடப்படுபவை. அதிகநேரத்தை எடுத்துக் கொள்பவை. இவ்வாறு மிக நீண்ட நேரம் ஒரு கலையை நுகரும் மனப்பக்குவமும், பொறுமையும் இன்றைய தலைமுறையிடம் இல்லை. அவசரமான உலகில் மரபார்ந்த கலைகளின் அதிக நேரம் எடுக்கும் தன்மை சிக்கலாக மாறி விடுகின்றது. இது கூத்தினைப் பார்ப்போரின் எண்ணிக்கையில் தாக்கம் செலுத்தும், படிப்படியாக கூத்துகளைப் பார்க்க வருவோரின் எண்ணிக்கையில் பெரும் வீழ்ச்சியை ஏற்படுத்தி வருகின்றது.

ஆயினும், ஞானசௌந்தரி நிகழ்த்துக்கலையானது மெலிஞ்சிமுனை கிராமத்தில் புகழ்பெற்ற அண்ணாவியார்களாகிய அந்தோனி யேசுதாசன், அலெக்ஸ்டாண்டர் பீட்டர் ஆகியோரின் அயராத உழைப்பு, ஆத்மார்த்தமான பங்களிப்பு என்பவற்றால் பல நெருக்கடிகளுக்கு மத்தியிலும் இன்றும் நிகழ்த்தப்பட்டுக் கொண்டு தான்இருக்கின்றது.

அழிவின் விளிம்பில் நான்கு தலைமுறைகளாக தக்கவைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இந்தக்கலையினை கட்டிக்காக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் இந்தக்கால இளைஞர், யுவதிகளின் கையில்தான் உள்ளது.

# தொலையும் தொன்மைகள்!

■ கே.எஸ்.சிவஞானராஜா

கால்நடைகளின் தாகத்தைத் தீர்ப்பதற்காகவும், மக்களின் அன்றாடத் தேவைகளுக்காகவும் சிறப்பாகப் பாதசாரிகளின் பயன்பாட்டுக்காகவும், வண்டில்களில் செல்வோர் ஓய்வெடுத்துச் செல்வதற்கும், பொருள்களைக் காவிக்கொண்டு வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் ஓய்ந்திருப்பதற்கு ஏதுவாகவும் வயல்களிலும் ஆலயங்களிலும் முன்னைய காலங்களில் கேணிகள் அமைக்கப்பட்டன. ஒரு கேணி ஓரிடத்தில் அமைவுபெறுகின்றது என்றால் அதன் அருகே ஆவுரஞ்சிக்கல், தொட்டிகள், சுமை தாங்கிகள், பொழிகற்கள் என்பனவும் அமைக்கப்படும்.

ஆக, உழைத்துக் களைத்து வருவோருக்கும் ஓய்வு அவசியப்படும் கால்நடைகளுக்கும் இந்தக் கேணிகள் அக்காலத்தில் சுவர்க்கபுரிகளாகவே இருந்தன. இவ்வளவும் பொருந்திய அழகான கேணியாகவே தாவடிச் சந்திக்கருகில் காங்கேசன்துறை பிரதான வீதிப்பகுதியில் கேணியொன்று அமைவுபெற்றிருந்தது. தற்போது அந்தக் கேணி சோபை இழந்து சோகமயமாகக் காட்சி தருகிறது.

ஆவரங்காலில் இருந்த கேணியானது, தூர்ந்துபோய் இருந்த இடமே இல்லாது இருந்தவேளை 'புண்ணியம் கிடைக்கும் மூடாதீர்கள். புனருத்தனம் செய்யுங்கள்' என்று பழமை விரும்பிகள் வலியுறுத்தினார்கள். அந்தக் குரலுக்கு மதிப்பளித்து மீண்டும் அதற்கு உயிர்ப்பிச்சை கொடுத்ததால், இன்று சிவன்கோவிலின் வடக்குப்பக்கத்தில் அந்தக்கேணி அதிசயமான கேணியாகப் பரிணமித்து மிளிர்கிறது. ஆவரங்கால் நீடு வாழ்கிறது. இது ஒரு புண்ணியமான கைங்கரியமாகும்.

இதேபோல தாவடிக்கேணியும் சீராக்கப்பட்டு பேறாக்கப் பட வேண்டும். ஆவன புரியுங்கள். தாவடி பூத்து தலை சிறந்து தவமிருக்கும். அல்லாமலும் அடுத்த சந்ததிக்கு ஒரு முதலீடாகவும் இருக்கும். உல்லாச பயணிகளுக்குப் புராதன செய்தியை இயம்பும். அரும் பெரும் சொத்தாகவும் அமையும். இந்தக் கேணி மட்டுமல்ல வடபுலத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கேணிகள் இருந்தன. இன்று அவற்றில் பலவற்றைக் காணவில்லை. தயவு செய்து கேணிகளை மூடிவிடாதீர்கள். காரணம் அவை வாய் விடாத பிராணிகளுக்காகவே உருவாக்கப்பட்டவையாகும். பெரும்பாலான எம்மவர்களில் எதையும் அழிக்க தெரியுமே தவிர ஆக்கத்தெரியாது. ஆன்மிகத்திலும் சரி அரசியலிலும் சரி இன்று சர்வ சாதாரணமாக அழித்தல் தொழில் நடைபெறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறவிப் பயனை பேறாக்கித் தருகின்ற கதிர்காம யாத்திரை!

பாதயாத்திரை என்றாலேயே பலரின் மனதில் தோன்றுவது கதிர்காமக்கந்தனின் நினைவுகள்தான். அந்தளவுக்குக் கதிர்காமக் கந்தனின் மீது அளவுகடந்த பற்று வைத்திருப்பவர்கள் இலங்கைத் தமிழர்கள். வருடாந்தம் கதிர்காம கந்தனை நோக்கி பக்திப்பூர்வமான பாதயாத்திரை செல்வசந்நிதி முருகனது தெய்வத் தலத்திலிருந்து செல்வது வழமையானது. இது உலகில் மிக நீண்ட ஆன்மிக யாத்திரையாகச் சொல்லப்படுகின்றது.

இந்தப் பாதயாத்திரையின் தூரம் சுமார் 815 கிலோமீற்றர்கள். சீரான காலநிலை காணப்பட்டால் சுமார் 50 நாள்களில் கதிர்காம வேலனிடம் சென்றுவிடலாம். இந்த வருடத்துக்கான யாத்திரை கடந்த மே மாதம் 6ஆம் திகதி ஆரம்பமானது. ஜூன் மாதம் 16ஆம் திகதி வேலவனின் சந்நிதானத்தில் யாத்திரை நிறைவுற்றது.

**யாத்திரையின் ஆரம்பம்**

மே மாதம் 6ஆம் திகதி அதிகாலை எல்லோரும் பாதயாத்திரைக்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தனர். அதேவேளை ஆலயத்திலும் பாதயாத்திரைக்கான பூஜைகள் ஆரம்பமாகின. சந்நிதி முருகனின் காண்டாமணி ஒலிக்க முருகனின் சந்நிதியில் வேல்பெருமானுடன் பாதயாத்திரையில் இருந்து எடுத்துச் செல்வதற்கான உயர்ந்த வேல்களும் பூஜைக்காக வைக்கப்பட்டிருந்தன. பூஜைகள் பக்திப்பூர்வமாக ஆரம்பமானது. பாதயாத்திரையில் பங்கு கொள்ளும் முருகனடியார்கள் மெய்யுருகி முருக நாமத்தை உச்சரித்து பக்தி ததும்ப பாடியவாறு, தமது நிலையிலிருந்து மெய்யுருக பக்தி பரவச ஆட்டங்களுடன் காணப்பட்டனர். அவ்வேளையில் முருகனது பூசகர் உள்ளே இருந்த வேல்களை எடுத்து வந்து பாதயாத்திரையின் முக்கியஸ்தரான வேல்சாமியிடம் கையளித்தனர். எல்லோரும் பக்திபரவசத்துடன் முருகநாமம் ஒலித்து வீதியை வலம்வந்த பின்னர் வெளி வீதியையும் வலம்வந்து எல்லோரும் வாசலில் அமர்ந்திருந்தனர். இறுதியாக பாதயாத்திரை அடியார்களுக்கு காணிக்கைகளும் உதவிகளும் வழங்கப்பட்டன. ஆலயவாசலிருந்து புறப்பட்டவர்கள் முதல் நிகழ்வாக ஆலய கிழக்கு வாசல் வீதியில் உள்ள சந்நிதியான் ஆச்சிரமத்தில் ஆச்சிரம முதல்வர் மோகன தாஸ் சுவாமிகளால் வரவேற்கப்பட்டு ஆச்சிரமத்தில் காலை உணவு பறிமாறப்பட்டது.




நா.தங்கவேல்

**பயணப்படுதல்**

அவர்கள் வழியனுப்பப்பட்டதையடுத்து, முதலாவதாக வல்லைப் பாலத்துக்கு அருகிலுள்ள ஆலயத்தில் அவர்கள் உபசரிக்கப்பட்டனர். தொடர்ச்சியாக ஆலயங்களில் தரிசனங்கள் இடம்பெற்று அன்று இரவு பன்றித்தலைச்சி அம்மன் கோவிலில் அடியவர்கள் தங்கினார்கள். இவ்வாறாகப் பயணம் தொடர்ந்தது. ஆலயங்களுக்கு மேலதிகமாக பொதுமக்களும் பாதயாத்திரையில் ஈடுபட்டவர்களுக்கு உணவுகள், குளிர்பானங்கள் மற்றும் வேண்டிய வசதிகளை வழங்கினார்கள். இந்தப் பாதயாத்திரைக் குழு ஒரு குறிபிட்ட வயதுக்குரியவர்களை மட்டும் உள்ளடக்கியதாக இருக்கவில்லை. ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் என்று பலரையும் சார்ந்ததாகவே இருந்தது. கதிர்காம யாத்திரையின் போது காடு, மேடு மற்றம் நீர்நிலைகள், குன்றுகள், கடற்கரையோரங்கள் என பலவற்றை கடந்துசெல்வது சித்தமாகும். இவ்வருடம் கதிர்காமக் கந்தனை சுமார் 50 ஆயிரம் பக்கர்கள் நேரில் தரிசித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. வாழ்வில் ஒருமுறையேனும் கதிர்காமக் கந்தனை தரிசித்தலென்பது பிறவிப் பயன் என்பதுடன் பெரும் பாக்கியமுமாகும்.

## குடிலும் தலைமையாசிரியரும்

# புலம்பெயரின் தமிழுணர்வை பறைசாற்றும் ஒரு படைப்பு!




பல்லினப் பண்பாடுகளை அங்கீகரித்து ஆதரவு அளித்து அவற்றின் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்கும் மேற்குலக நாடுகளில் தமிழர்களின் பரம்பலும் அவர்களின் தாய் மொழியான தமிழ், சமயம் அவை சார்ந்த பண்பாடும் அண்மைக்காலங்களில் மிகத் துரிதமாக வளர்ந்து வருகின்றன. பல்வேறு காரணங்களால் மேற்குலக நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து சென்ற தமிழ் மக்கள் அந்தந்த நாடுகளில் எங்களின் பண்பாடுகளையும் கலாசாரத்தையும் நன்கு நிலை நாட்டியுள்ளனர். அவ்வாறான சிறப்புக்குரியவர்களில் யாழ்ப்பாண சித்தங்கேணியைச் சேர்ந்தவரும் 50ஆண்டுகளுக்கும் மேலாக பிரிட்டனில் வசித்து வருபவருமான கலாநிதி நித்தியானந்தனும் ஒருவர்.

'ரத்னம் பவுண்டேசன்' என்ற அமைப்பின் ஊடாக தமிழர் தாயகத்தில் பல்வேறுபட்ட நலன்புரிச் செயற்றிட்டங்களை மேற்கொண்டுவரும் அவர், அண்மையில் தனது சுய வாழ்க்கை தொடர்பில் எழுதிய 'குடிலும் தலைமையாசிரியரும்' (குடில் அன்ட் ஹெட்மாஸ்டர்) என்ற நூலை வாசிக்கக்கிடைத்தது. புலம்பெயர் தேசங்களில் எவ்வாறு தமிழ் வளர்கின்றது - வர்க்கப்படுகின்றது என்பதற்கான ஓர் அனுபவப்பகிர்வாக இந்தநூல் அமைந்துள்ளது என்றால் அதை மறுப்பதற்கில்லை. மக்களுக்கு உதவுவது தனக்கு மகிழ்வைத் தருவதாகக் குறிப்பிட்டிருக்கும் நூலாசிரியர் கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாகச் சமூகத்திற்குப் பயனுள்ள பல சேவைகளை மேற்குறித்த அமைப்பின் ஊடாகத் தொடர்ச்சியாக மேற்கொண்டமை தொடர்பில் அந்த நூலில் மிகத்தெளிவாகவும் விவரமாகவும் பதிவுசெய்துள்ளார்.

'குடில்' என்பது லண்டனில் உள்ள அவருடைய வீட்டின் பெயர். 'மேற்கு இலண்டன் தமிழ் பாடசாலையின்' தலைமையாசிரியராக 19822012 வரை சுமார் 30 ஆண்டுகளாக ஆற்றிய கல்விப் பணியை விதந்து அந்த நூலில் பதிவுசெய்துள்ளார். இவ்விரண்டு விடயப்பரப்புக்களும் தான் அந்த நூலுக்கு 'குடிலும் தலைமை ஆசிரியரும்' என்று பெயர் வரவும் காரணமாகின.

ஆங்கில மொழிச் சூழலில் வாழ வேண்டிய நிர்ப்பந்தம் புலம்பெயர் தமிழர்களுக்கு மிகக் குறிப்பாக அவர்களின் சிறார்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது. இவ்வாறானதொரு நிலையில் எம்மொழியையும் அது வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் நெறிமுறைகளை அறிந்து கொள்ளவும் அவற்றினை ஓரளவிற்காயினும் வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகவும் தான் தலைமை தாங்கி நடாத்தும் லண்டன் தமிழ் நிலையத்தினூடாக ஏதாவது உருப்படியாகச் சாதிக்கும் நோக்குடைய நித்தியானந்தன், தன் செயற்றிட்டங்களைப் பற்றியும் அந்த நூலில் குறிப்பிட்டுள்ளார். உண்மையில் அவரின் செயற்பாடுகள் கனதியானவை - பயனுள்ளவை.

இவ்வாறு தாய்மொழிப்பற்றும், கலைத்துறையில் அறிவும் அவற்றினைத் தான் வாழும் நாட்டிலும் வளர்க்க வேண்டும் என்ற பேரவாவுமுடைய, நித்தி லண்டன் தமிழ் நிலையத்தின் தலைமையாசிரியராகப் பதவி வகித்த காலத்தில் வேறேங்குமில்லாத வகையில் தமிழும் நுண்கலைகளும் ஒன்றிணைந்து வளர்வதற்கான முயற்சிகள் பல முன்னெடுக்கப்பட்டன.


இலண்டனில் சிறார்களுக்கு வாரத்தில் ஞாயிற்றுக்கிழமைகளில் தமிழ், சைவம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் நோக்குடன் 1977ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இலண்டன் மேற்குத் தமிழ் பாடசாலையினை 50 மாணவர்கள் 8 ஆசிரியர்களுடன் அதன் தலைமையாசிரியராக 1982 கலாநிதி நித்தியானந்தன் பொறுப்பேற்று சுமார் 30 ஆண்டுகளாக அரும்பணியாற்றி 2012இல் ஓய்வு பெற்றுச்செல்லும் போது சிறார் வகுப்புத்தொடக்கம் பல்கலைக்கழகப் பட்டக்கல்வி வகுப்பு வரை 450இற்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட இலண்டனில் உள்ள மிகப்பெரிய தமிழ்ப்பாடசாலயாக விரிவாக்கி உயர்ந்த கல்விப்பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ளும் கல்வி நிறுவனமாக அதை மாற்றினார். லண்டனில் உள்ள ஏனைய தமிழ்ப் பாடசாலைகளும் தமிழ்மொழியினை உயர்தரத்தில் கற்பிக்க முயன்றால் தமிழ் அங்கு இன்னும் பிரகாசிக்கும் என்ற தனது வேணவாவையும் அதற்குரிய ஆலோசனைகளையும்கூட இந்த நூலில் நூலாசிரியர் பதிவுசெய்துள்ளார்.

இந்த நூல் போட்டி நிறந்த சூழலும் வாய்ப்பு வசதிகளும் பெருகியுள்ள இன்றைய கல்வி உலகுக்கு வழிகாட்டக்கூடிய வகையில் சாதனையாளர் ஒருவரால் எழுதப்பட்ட சிறந்த சுயசரிதை நூலென விதந்து குறிப்பிடலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 23 - 03 - 1945



உதிர்வு 30 - 07 - 2022

### அமரர் ஆறுமுகம் சுப்பிரமணியம்

( மீசை மணியம் )

திதி: துதியை

ஆண்டு ஒன்று ஆகிவிட்டது
ஆறவில்லை எங்களின் துயரம்
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும்
நாங்கள் நினைத்தவுடன் கண்களில்
இருப்பீர்கள் கண்ணீராக
நூறாண்டு நகர்ந்தாலும் எங்களை
விட்டு அகலாது உங்கள் நினைவு
ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி !!!

443/23, சரஸ்வதி லேன்,
அரியாலை.

குடும்பத்தினர்

*ரணிலுடனான...*

தேசியக் கட்சிகள் 'கண்துடைப்புக்காகவே இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது' என்று அவரிடம் நேர்பட காட்டமாகச் சுட்டிக்காட்டியுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாளைமறுதினம் இந்தியாவுக்குச் சென்று இந்தியப் பிரதமர் மோடி, இந்திய குடியரசுத் தலைவர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்டோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார். இந்தச் சந்திப்புக்கு முன்னதாக ரணிலுக்கும் தமிழ்க் கட்சிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று மாலை இடம்பெற்றது.

பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் அற்ற அதிகாரப்பகிர்வு தொடர்பில் ஜனாதிபதி ரணில் பரிந்துரைத்துள்ளார் என்று தெரியவருகின்றது. எனினும் அதை ஏற்பதற்குத் தமிழ்த் தேசியக் கட்சிகள் திட்டவட்டமாக மறுப்புத் தெரிவித்தன. 13ஆவது திருத்தம் முற்றுமுழுதாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். 13ஆவது திருத்தம் முற்றாக நடைமுறைப்படுத்தப்படுவதற்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவும் உடன்பட்டுள்ளார் என்பதையும் சுமந்திரன் சுட்டிக்காட்டினார். இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி, 'நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் உடன்பட்டாலேயே 13ஆவது திருத்தம் முற்றாக நடைமுறைப் படுத்தப்படும். நான் ரணில் விக்கிரமசிங்க. ரணில் ராஜபக்ச அல்ல' என்று தெரிவித்துள்ளார்.

**வடக்கு - கிழக்குக்கு அநீதி இழைக்காராம்!**

வடக்கு - கிழக்கு மக்களுக்கு தாம் ஒரு போதும் அநீதி இழைக்கப்போவதில்லை என்றும் அவர்களுக்காக மேலும் ஏதாவது செய்ய வேண்டுமாயின் கலந்துரையாடல் மற்றும் இணக்கப்பாட்டின் மூலம் நாடாளுமன்றத்தின் முழுமையான ஆதரவை பெற்றுக்கொள்ளவேண்டும் எனவும் ஜனாதிபதி சந்திப்பில் தெரிவித்துள்ளார். அதிகாரப் பகிர்வுக்கான அடிப்படைச் செயற்பாடுகள் நிறைவடைந்ததன் பின்னர் மாகாண சபைகளின் செயற்பாடுகளை முன்னெடுப்பது தொடர்பாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள சட்ட வரைவு தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது. ஊழல் ஒழிப்புச் சட்டம், நாடாளுமன்றக் குழுநிலையில் திருத்தங்களுக்குட்படுத்தப்படும் என்றும் உயர் நீதிமன்றத்தால் முன் வைக்கப்பட்டுள்ள திருத்தங்களும் பரிசீலிக்கப்படும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (அ-ம-24)

## வலி - கிழக்கு வாழைக்குலை உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச்சங்கம் வ-து மேசன் வேலைக்கான கூறுவிலை கோரல்

வலி. கிழக்கு வாழைக்குலை உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச்சங்கம் நீர்வேலியானது கொள்வனவு விற்பனை நிலையத்தின் இருபக்கமும் பத்திரிப்புக் கட்டி மண் நிரப்புவதற்குப் பொருத்தமான கட்டட ஒப்பந்தகாரரிடம் இருந்து கூறுவிலையினைக் கோருகின்றது.

**மீளளிக்கத்தக்க வைப்புப் பணம் - 30,000ரூபா**
**கூறுவிலை சமர்ப்பிப்பதற்கான இறுதித்தினம் - 08.08.2023 நண்பகல் 12.00 மணிக்கு முன்**

கட்டட ஒப்பந்தகாரர் விண்ணப்ப படிவத்தினையும், ஏனைய தகவல்களையும் சங்க அலுவலகத்தில் தினமும் காலை 6.00 மணி தொடக்கம் 11.00 மணிவரை தினமும் பெற்றுக் கொள்ள முடியும்.

**தலைவர்,**
**வலி.கிழக்கு வாழைக்குலை,**
**உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச்சங்கம், நீர்வேலி.**
**076 711 1168**

(CS/51309)AH-1

# INVITATION FOR BID (2023/08)
## Regional Directorate of Health Service Jaffna.

1. The Chairman, Regional Procurement Committee, on behalf of the Regional Directorate of Health Services, Jaffna, invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**

"Bidding will be conducted through National Competitive Bidding (NCB. The Public Finance Circulars No 03/2020 and 03/2020 (i) dated 09.10.2020 and 11.01.2021 respectively will also be adopted.

3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below
4. Qualification' requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the Schedule (Section 5) for SBD 3 documents
5. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the bidding documents at the same place on any working days from 09.00 hrs to **15.00 hrs**.
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Regional Directorate of Health Services,No 572/3 Hospital Road Jaffna.** (T.P:021 222 4966, Fax: 021 222 9971) from 9.00 a.m. to 15.00 p.m. **during the period mentioned in the table, upon payment of non-refundable fees as mentioned in the table.** The method of payment should be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Regional Procurement Committee, Regional Directorate of Health Services, No 572/3 Hospital Road, Jaffna** on or before 10.30 a.m at the date mentioned in the table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at Conference Hall, Regional Directorate of Health Services, 572/3 Hospital Road, Jaffna on commencing at 2.30 P.M on the date mentioned in the table.
9. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table.

| CATEGORY I | | |
|---|---|---|
| | **Document Issuing/Purchasing Period** | **From 19.07.2023 until 02.08.2023** |
| | **Pre-Bid Conference** | **At 2.30 P.M on 26.07.2023** |
| | **Closing and Opening of Bids** | **At 10.30 A.M on 03.08.2023** |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period | Grade Required | Non-Refundable Fees | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount | Validity Period |
| NP/04/41/2023/PSSP/W/51 | Construction of Disable ramp and Completion of Vehicle and Motor Bike park at Health village pannai,Jaffna. | 1.86 | 78Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 19,000.00 | Till 17.10.2023 |
| NP/04/41/2023/PSSP/W/52 | Improvement Work at BME unit Health village pannai,Jaffna. | 0.348 | 43Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 1,500.00 | Till 17.10.2023 |
| NP/04/41/2023/MSD/W/01 | Improvement work at Drug Store Base Hospital Chavakachcheri | 1.10 | 70Day | C9 and C8 (Buildings) | 1,500.00 | 11,000.00 | Till 17.10.2023 |
| NP/04/41/2023/MSD/W/02 | Improvement work at Drug Store Base Hospital Tellippalai. | 2.60 | 84Days | C9 and C8 and C7 (Buildings) | 1,500.00 | 26,000.00 | Till 31.10.2023 |

**Chairman**
**Regional Procurement Committee**
**Regional Directorate of Health Service, Jaffna.**

(cr.37273 ) (N. 1)

## வடக்கு - ...


ஜனாதிபதிக்கும் தமிழ்க் கட்சிகளுக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற சந்திப்பில் கலந்துகொண்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு - கிழக்கு மாகாணங்களை இணைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றனவா என்று வினவியபோதே ஜனாதிபதி இந்த விடயத்தை அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், வடக்கு - கிழக்கில் நீதி நிலைநாட்டும் செயற்பாடுகளில் வெளிநாட்டு நீதிபதிகளை ஈடுபடுத்தும் எண்ணம் அரசாங்கத்துக்கு இல்லை. அவசியம் ஏற்படும் பட்சத்தில் தெற்கு மற்றும் கிழக்கு ஆசிய நாடுகளில் நடைமுறையில் உள்ள முறைமைகளுக்கு அமைய வெளிநாட்டு கண்காணிப்பாளர்களின் அறிக்கைகளை மாத்திரம் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

பிரதமர் தினேஷ் குணவர்த்தன, அமைச்சர்களான சுசில் பிரேமஜயந்த, பிரசன்ன ரணதுங்க, விஜயதாஸ ராஜபக்ச, டக்ளஸ் தேவானந்தா, இராஜாங்க அமைச்சர்களான சுரேன் ராகவன், எஸ்.வியாழேந்திரன், எஸ்.சந்திரகாந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான ஆர்.சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன், சி.வி.விக்னேஸ்வரன், அங்கஜன் இராமநாதன், செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன், சி.சிறீதரன், த.சித்தார்த்தன், இரா.சாணக்கியன், த.கலையரசன், கு.திலீபன், ஜி.கருணாகரன், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க உள்ளிட்ட பலரும் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



செல்வன் அமரர்

## யயந்திரராசன் லேகராஜேஸ்வர்ரன்

(தரம் 10, தமிழ் மத்திய மகா வித்தியாலயம் – வவுனியா)

அன்னை மடியில் 26.07.2008 — ஆண்டவன் மடியில் 19.06.2023

"நிஜம் என்பதைத் தொலைத்தாலும் – என்றும் நிழலாய்த் தொடரும் உங்கள் நினைவு....

காரைநகரைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட **யயந்திரராசன் வசந்தி** தம்பதிகளின் அன்பு மகன் **செல்வன் லேகராஜேஸ்வர்ரன் அவர்களின் 31 ஆம் நாள் நினைவுக் கிரியைகளும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்** இன்று (19.07.2023) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது.


அத்துடன் கடந்த (19.06.2023) திங்கட்கிழமை எமது அன்பு மகனின் மறைவுச் செய்தி கேட்டதும் நேரில் வந்தும், தொலைபேசி ஊடாகவும், மின்னஞ்சல் சமூக வலைத்தளங்கள் ஊடாகவும் ஆறுதல் கூறி அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மலர்மாலைகள், மலர்வளையங்கள், கண்ணீர் அஞ்சலிகள் பதாகைகள் சாத்தியவர்களுக்கும் மற்றும் மகனின் பாடசாலை, கல்வி நிலையங்களின் அதிபர், ஆசிரியர்கள், வகுப்புத் தோழர்கள் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள், எமது துயரில் பங்கு கொண்ட அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**217, புகையிரத நிலைய வீதி,**
**வைரவப்புளியங்குளம், வவுனியா.**

**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 11 . 1949 — மறைவு 16 . 07 . 2023



## திருமதி பொன்னையா நகுலேஸ்வரி (ராசு அக்கா)

பன்னாலை பாடசாலை வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னையா நகுலேஸ்வரி (ராசு அக்கா) கடந்த (16.07.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் - சிவபாதநாயகி தம்பதிகளின் மகளும், காலஞ்சென்றவர்களான வட்டுக்கோட்டை விநாசித்தம்பி - நாகரத்தினம் அம்மா தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற பொன்னையாவின் அன்பு மனைவியும், சிவலிங்கத்தின் (லண்டன்) உடன்பிறந்த சகோதரியும், கலாலோஜினி (லண்டன்), ராஜேஸ்வரி, பாலச்சந்திரன், தங்கராணி, காலஞ்சென்ற மனோன்மணி மற்றும் திருச்செல்வம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், சுபாஸ்கர் (லண்டன்), சுசாங்கர் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.07.2023) வியாழக்கிழமை பன்னாலையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் கீரிமலை செம்மண் வாய்க்கால் இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பன்னாலை,**
**தெல்லிப்பழை.** (CS 51313) AH-1

**தகவல்: குடும்பத்தினர்.**

+44744 794 9830 - (தம்பி) - லண்டன். 077 902 2344

## கோதுமை மா ...

குறைக்கப்பட்டுள்ளது.

கோதுமை மாவின் விலை குறைப்பு விரைவில் நடைமுறையாகும் என்ற அறிவிப்பு கடந்த சில நாள்களாகவே வெளியிடப்பட்ட நிலையில், நேற்று நள்ளிரவுமுதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த விலைக் குறைப்புகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. (அ-ம)

## குருதி...

இளைஞர் ஒருவர் குருதி பெருக்கெடுத்தோடிய நிலையில் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். கொக்குவில் தெற்கு, தாவடியைச் சேர்ந்த தர்மலிங்கம் பவிசன் (வயது -25) என்ற இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இணுவில் மருத்துவமனைக்கு அருகிலுள்ள வளவிலிருந்து குருதி வழிந்தோடிய நிலையில் இளைஞனின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. சடலம் மீட்கப்பட்ட பகுதிக்கு அருகில் பீடி, பியர் ரின், தேசிக்காய், ஊசி உள்ளிட்டவை மீட்கப்பட்டுள்ளன. இதனால் போதைப்பொருளின் பாவனை அந்த இளைஞனின் இறப்புக்குக் காரணமாக இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர். இறப்புத் தொடர்பில் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

அவருடைய இறப்புக்கு என்ன காரணம் என்பது இன்றையதினம் நடைபெறவுள்ள உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னரே உறுதிப்படுத்தப்படும். (ம-26)


**வேலைவாய்ப்பு**

பிரபல நிறுவனத்துக்கு Accounts மற்றும் Computer தெரிந்த பெண்பிள்ளை தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.

**077 221 5167** (CS/5131) AH-1

**No.31, Manipay Road, Jaffna.**


# மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 01 . 1945 — மறைவு 17 . 07 . 2023



## மனோன்மணி செல்வராஜா

பொற்பதி வீதி, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், காளிகோவில் வீதி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட மனோன்மணி செல்வராஜா நேற்றுமுன்தினம் (17.07.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்வராஜாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கணபதி - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், ராஜ்மோகன் (பொறியியலாளர் - மெல்பேன்), ராஜ்சுதன் (ஜேர்மனி), ராஜ்ரூபன் (கனடா), யசோதா (பிரதேச செயலாளர் - சண்டிலிப்பாய்), ராஜ்வரதன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், அனுஷா, சுபாஷினி, கல்பனா, உதயகுமார் (தொழில் வழிகாட்டல் அதிகாரி - வலிகாம வலயம்), ரோகிணி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கௌரி ஹர்ஷினி, ஷிவா பிருத்வி, மதுஷா, கபிஷா, மதுமிதா, சினேகிதா, ஹரிஸ்ராஜ், தமன்ஷா, கம்ஷிதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், சரஸ்வதி மற்றும் அன்னம்மா, மகேஸ்வரி, ராஜேஸ்வரி, யோகேஸ்வரி, லலீலா, பத்மநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கந்தசாமி, பூமணி, தங்கரத்தினம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.07.2023) புதன்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**காளிகோவில் வீதி,**
**கொக்குவில்.** (CS/51311) AH-1

**தகவல்: குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

பிறப்பு 17 . 05 . 1940 — இறப்பு 15 . 07 . 2023



## திரு. நீக்கிலாப்பிள்ளை வென்சஸ்லஸ் தங்கராஜா

யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் குருசோ வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.நீக்கிலாப்பிள்ளை வென்சஸ்லஸ் தங்கராஜா கடந்த (15.07.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நீக்கிலாப்பிள்ளை திரேசம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான தியோப்பிள்ளை றெபேக்கா தம்பதியரின் மருமகனும், சரோஜா ராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், மொறின் நிஷாந்தினி (கனடா), பாசமிகு தந்தையும், றொமேஷ் பாலாஜி (கனடா) அன்பு மாமனாரும், ரினிற்றி, டெவோன் ஆகியோரின் நேசமிகு பேரனும், எலிசபேத் சவிரிமுத்து (கனடா), யாகப்பு, றெனி யோசப் குணசிங்கம் (டென்மார்க்), அருட்சகோதரி ஹேர்மன் ஜோசப் (தி.கு) ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற பீற்றர் மற்றும் அருள்நாயகம், காலஞ்சென்ற யேசுதாசன் மற்றும் றோசரி, பற்றிமா, மதுரநாயகம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் யாழ். கோவில் வீதி 89 ஆம் இலக்க இல்லத்தில் வைக்கப்பட்டு, நல்லடக்கத் திருப்பலிக்காக நாளை (20.07.2023) வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு, பூதவுடல் புனித மரியன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**89, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.**
**077 996 3119, 077 900 4341**

**தகவல்: குடும்பத்தினர்** (cs51312) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சரவையை ஒரு மாதம் சிறையிலடைக்க கோரிக்கை



கொழும்பு, ஜூலை 19

வன விலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 43 ஆவது ஏற்பாட்டை மீறி அமைச்சரவை சட்டத்துக்கு அப்பாற்பட்ட வகையில் செயற்பட்டுள்ளது. நாட்டின் பொதுச் சட்டத்துக்கு அமைச்சரவை கட்டுப்பட வேண்டும். அதனால் அமைச்சரவையை கைது செய்வது தொடர்பில் பொலிஸ்மா அதிபர் கவனம் செலுத்த வேண்டும்.

இவ்வாறு பிவிதுரு ஹெல உருமயக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில கோரிக்கை முன்வைத்துள்ளார். நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அமைச்சரவை அனுமதியுடன் கம்பஹா தரால்வாவில் பகுதியில் இருந்த 'பன்டு கரந்த அல்லது க்ரூடியா சிலனிக்கா' என்ற அருகிவரும் மரம் அந்த இடத்தில் இருந்து வெட்டி அகற்றப்பட்டது என்று ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் தைரியமாகக் கூறுகின்றனர்.

நாட்டில் 'பன்டுகரந்த அல்லது க்ரூடியா சிலனிக்கா' என்ற மரம் ஒன்றல்ல ஏழு உள்ளன. 20 மரக்கன்றுகளை நட்டுள்ளோம். எதிர்வரும் நாள்களில் 200 மரக்கன்றுகளை நடுவோம் என்று குறிப்பிட்டு இந்த மரத்தை வெட்டி வீழ்த்தியதை நியாயப்படுத்த அரசாங்கம் முயற்சிக்கிறது. வன விலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 43 ஆவது அத்தியாயத்தின் விசேட விதிவிதானங்களுக்கு அமைய இந்த மரத்தை வெட்டுவதற்கோ அல்லது வெட்டுவதற்கான கட்டளை பிறப்பிப்பதற்கோ அமைச்சரவைக்கு அங்கீகாரம் கிடையாது.

வீதி அபிவிருத்திக்கு இந்த மரம் தடையாக இருக்குமாயின் மரத்தை பாதுகாப்பான முறையில் வேருடன் எடுத்து பிறிதொரு இடத்தில் நாட்டலாம் என சுற்றாடல் துறை அதிகார சபை நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சுக்கு அறிவித்துள்ளபோதும் அதை அமைச்சரவை கவனத்தில் கொள்ளவில்லை.

வன விலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தை திருத்தம் செய்யாமல் சட்டத்தை அமைச்சரவை கையில் எடுத்து சட்டவிரோதமான முறையில் மரத்தை அகற்றியுள்ளது. ஆகவே ஒட்டுமொத்த அமைச்சரவையும் ஒருமாத காலம் சிறை செல்லும் குற்றத்தை புரிந்துள்ளது.

நாட்டு மக்களுக்கு எடுத்துக்காட்டாக அமைச்சரவை செயற்பட வேண்டும். சட்டத்தை செயற்படுத்தும் அதிகாரம் அமைச்சரவைக்கு கிடையாது. 'பன்டு கரந்த அல்லது க்ரூடியா சிலனிக்கா' என்ற அருகிவரும் மரம் விவகாரத்தில் அமைச்சரவை சட்டத்தை மீறியுள்ளது. அமைச்சரவையை கைது செய்வது தொடர்பில் பொலிஸ்மா அதிபர் கவனம் செலுத்தவேண்டும் - என்றார். (எ-இ)

# ராஜபக்சக்களைத் தூய்மைப்படுத்த சாகர தலைமையில் ஆணைக்குழு



## மக்கள் விடுதலை முன்னணி தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 19

**பொருளாதாரப் பாதிப்புக்கு கப்ரால், பஸில், மஹிந்த ஆகியோர் பொறுப்புக் கூற வேண்டும் என நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள நிலையில் நிதி வங்குரோத்து தொடர்பில் ஆராய நாடாளுமன்றத்தில் தெரிவுக்குழு அமைத்துள்ளமை வழக்கு விசாரணைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும். ராஜபக்சக்களை தூய்மைப்படுத்தும் தெரிவுக்குழுவில் நாங்கள் கலந்துகொள்ளப் போவதில்லை.**

- இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

கண்டியில் நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாடு ஏன் வங்குரோத்து நிலை அடைந்தது?, அதற்கு யார் பொறுப்புக்கூற வேண்டும்? என்பதை மக்கள் நன்கு அறிவார்கள். வங்குரோத்து நிலை இயற்கையாகவே தோற்றம் பெற்றது என்பதை காண்பிப்பதற்காக நிதி வங்குரோத்து நிலை தொடர்பில் ஆராய நாடாளுமன்றத்தில் சாகர காரியவசம் தலைமையில் விசேட தெரிவுக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் எடுத்த தீர்மானங்களாலேயே நாடு வங்குரோத்து நிலை அடைந்தது. அதை ஆராய பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தலைமையில் தெரிவுக்குழு அமைக்கப்பட்டுள்ளது. பொருளாதாரப் பாதிப்புக்கு மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால், முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆகியோர் பொறுப்புக் கூறவேண்டும் எனக்கோரி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள நிலையில் நிதி வங்குரோத்து தொடர்பில் ஆராய நாடாளுமன்றத்தில் தெரிவுக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்தத் தெரிவுக்குழுவின் செயற்பாடுகள் நீதிமன்றச் செயற்பாடுகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

ராஜபக்சக்களைத் தூய்மைப்படுத்தும் நோக்கத்தில் சாகர காரியவசம் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள தெரிவுக்குழு பயனற்றது. தேர்தலை நடத்தினால் மக்கள் நீதிபதிகளாக இருந்து தீர்ப்பு வழங்குவார்கள் - என்றார். (எ-இ)

# கனிமவள விவகாரத்தில் ஆளுநருக்கு அதிகாரமில்லை

கனிமவளங்களின் விவகாரங்களில் தலையிடுவதற்கு மாகாண ஆளுநருக்கு அதிகாரம் இல்லை என்று கனிம வளங்கள் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்று வரும் இல்மனைற் அகழ்வு, மணல் அகழ்வு உள்ளிட்டவற்றை உடன் இடைநிறுத்த வேண்டும் என கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கனிமவளங்கள் திணைக்களத்துக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

அந்தக் கடிதத்துக்கு பதிலளிக்கையிலேயே கனிம வளங்கள் திணைக்களம் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.

கிழக்கு மாகாண ஆளுநரின் கூட்டத்துக்கு கனிம வளங்கள் திணைக்களத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. கனிமவளங்கள் திணைக்களம் மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்குகின்றது. கனிமவளங்கள் விவகாரங்களில் தலையிட மாகாண ஆளுநருக்கு அதிகாரம் கிடையாது என அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கனிமவளங்கள் திணைக்கள அனுமதியுடன் அரசியல்வாதிகள் சிலரால் வகை தொகையின்றி மணல் அகழ்வு, கனிய மணல் அகழ்வு என்பன இடம்பெற்று வருகின்றன. (ச-6)

# மோட்டார் சைக்கிள்களில் வித்தைகாட்டியோர் கைது




கொழும்பு, ஜூலை 19

பொதுமக்களை அச்சுறுத்தி விபத்துக்களை ஏற்படுத்தும் வகையில் மோட்டார் சைக்கிள்களைச் செலுத்திய குற்றச்சாட்டில் 16 இளைஞர்கள் கடுவலை பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் கடுவலை வெலிவிட்ட பகுதியில் இடம்பெற்றுள்ளது.

பொலிஸார் குறித்த செயற்பாட்டை நிறுத்துமாறு கட்டளையிட்டபோதும் அதனையும் மீறி குறித்த இளைஞர்கள் மோட்டார் சைக்கிள்களை வேகமாக செலுத்தி அச்சமூட்டினர்.

அதனையடுத்து பொலிஸார் அவர்களைத் துரத்திப் பிடித்து கைதுசெய்ததுடன் அவர்களின் மோட்டார் சைக்கிள்களையும் கையகப்படுத்தினர். கைதுசெய்யப்பட்டவர்கள் 18 முதல் 26 வயதுக்குட்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# விவசாயத்தை நவீனமயமாக்கி இறக்குமதியைக் குறைக்கத் திட்டம்



## விவசாய அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 19

விவசாயத்தை நவீனமயமாக்கும் ஜனாதிபதியின் திட்டத்தின்கீழ் 2025 ஆம் ஆண்டளவில் நாட்டில் விவசாயத் தேவையில் 80 சதவீதம் உள்நாட்டு உற்பத்தியிலிருந்து பெறுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

'ஒரு வருடத்தின் முன்னேற்றம்' என்ற தலைப்பின் கீழ் ஜனாதிபதி ஊடக அமையத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் புதிய உரக் கொள்கை காரணமாக 10 வருடங்களின் பின்னர் கடந்த சிறுபோகத்தின்போது 5 இலட்சத்து 12 ஆயிரம் ஹெக்ரேயர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது.

விவசாயத்தில் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதன் மூலம் ஏற்றுமதியை இலக்[illegible] மரக்கறிகள், பழங்[illegible]தியை அதிகரிக்கமுடியும். அதன் மூலம் விவசாயப் பயிர்களின் இறக்குமதியை மட்டுப்படுத்த முடியும்.

நாட்டின் சராசரி நெல் விளைச்சல் ஹெக்ரேயருக்கு சுமார் 3.7 மெற்றிக் தொன் ஆகும். எதிர்வரும் 6 போகங்களில் நெல்லின் ஆண்டுக்கான சராசரி விளைச்சலை 3.7 மெற்றிக் தொன் முதல் 7.4 மெற்றிக் தொன் வரை, இரட்டிப்பாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

அதனை 2026 ஆம் ஆண்டின் இறுதியில் 60 மெற்றிக் தொன் [illegible] எதிர்பார்க்கப்பட்டுள்ளது - என்றார். (ச-இ)

# மருத்துவப் பிரச்சினைகளால் மக்கள் அச்சமடையக்கூடாது!

## இலங்கை மருத்துவர்கள் சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 19

அண்மைய காலங்களில் நடைபெறும் சுகாதாரப் பிரச்சினைகளால் மக்கள் அச்சமடையத் தேவையில்லை என்று இலங்கை மருத்துவர்கள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கையில் தரம் குறைந்த மருந்துகள் தொடர்பிலான சம்பவங்கள் பதிவாகியுள்ளபோதும், மக்கள் அவ்வாறான சம்பவங்களினால் அச்சமடையக் கூடாது என்றும், இலவச சுகாதார சேவைகள் தொடர்பாக நம்பிக்கை இழக்கக்கூடாது என்றும் இலங்கை மருத்துவர்கள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கை மருத்துவர்கள் சங்கத்தின் தலைவர் மருத்துவர் வின்யா ஆரியரட்ண இது தொடர்பில் தெரிவித்துள்ளதாவது:

இலங்கையின் சுகாதாரத்துறை சவால்களை எதிர்கொண்டுள்ளதை ஏற்றுக்கொள்கின்றோம். ஒரு சில சம்பவங்களை அடிப்படையாக வைத்து முழு சுகாதார சேவையையும் மதிப்பிடுவது நியாயமில்லை. பொதுமக்கள் அரசாங்க மருத்துவமனைகளுக்குச் சிகிச்சைக்கு வரவேண்டும் - என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 20 வருட பூர்த்தியை முன்னிட்டு

## இலவச மருத்துவ சேவைகள்

யாழ்நகரில் மக்களின் நம்பிக்கையுடனும்,
நன்மதிப்புடனும் வெற்றிகரமாக இயங்கி வரும்





நியூ
## சன்றைஸ் மெடி
## கிளினிக்கின்

**20 ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு இலவச மருத்துவ முகாமும் இலவச மருத்துவ சேவைகளும் இன்று 19.07.2023 காலை 8.00 மணியளவில் ஆரம்பமாகவுள்ளது**

சிரேஸ்ட பேராசிரியரும், முன்னைநாள் பல்கலைக்கழக
துணைவேந்தரும், தற்போதைய பல்கலைக்கழக மானியங்கள்
ஆணைக்குவழுவின் உறுப்பினருமான
செல்வி **வசந்தி அரசரட்ணம்** அவர்களால்
மங்கள விளக்கேற்றலுடன் வைபவம் ஆரம்பிக்கப்பட்டு அதனைத்தொடர்ந்து

யாழின் முன்னணி சிரேஷ்ட கண்
சத்திரசிகிச்சை நிபுணரான
Dr.M. **மலரவன்** அவர்களால்
இலவச கண் பரிசோதனைகளுக்கான
ஆய்வுகூடம் திறந்து வைக்கப்படுவதை



தொடர்ந்து எமது **இலவச மருத்துவ முகாம்** மற்றும்
ஆலோசனை சேவைகள் இனிதே ஆரம்பிக்கப்படும்.

அனைவரையும் கலந்து பயன்பெறுமாறு பேரன்புடன் அழைக்கின்றோம்



தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு இலவச மூக்குக்
கண்ணாடிகள் வழங்கப்படும்.



**விற்பனைக்கு**

7 அடி நீளம், 5 அடி உயரம்
கொண்ட 4 வெளி கொண்ட வேம்பு
யன்னல் 3 விற்பனைக்குண்டு.
60,000/- (CS/25558)AH-1

**077 199 6117**


# அறிவித்தல்

மதிப்பிற்குரிய

## Nalin Information Technologies (Pvt) Ltd

## வாடிக்கையாளர் கவனத்திற்கு

எமது நிறுவனத்தின் சகல கிளைகளிலும் (யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார்) இரண்டு மாதகாலப் பகுதிக்குள் (01.04.2023 - 31.05.2023) தங்களால் திருத்த வேலைக்காக ஒப்படைக்கப்பட்ட கணினி மற்றும் கணினிசார் பொருட்களை (Warranty தவிர்ந்த) எதிர்வரும் 01.08.2023 ஆம் திகதிக்கு முன்னராக பெற்றுக்கொள்ளவும். தவறும் பட்சத்தில் தங்களால் வழங்கப்பட்ட பொருட்கள் இலத்திரனியல் கழிவாக எடுத்துக் கொள்ளப்படும் என்பதனை மிகவும் மன வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம். அப்பொருட்களுக்கு ஏற்படும் சேதங்களிற்கு எந்த வகையிலும் நிறுவனம் பொறுப்பேற்காது என்பதை தாழ்மையுடன் அறியத்தருகின்றோம். இதற்கு முற்பட்ட காலப்பகுதியில் வாடிக்கை யாளரால் மீளபெற்றுக் கொள்ளப்படாத பொருட்கள் ஏற்கனவே கழிவாக எடுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**குறிப்பு -**

எமது நிறுவனத்தில் திருத்தவேலைக்காக பொருட்களை ஒப்படைக்கும் போது இரு வாரங்களில் பொருட்களை மீளப் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பது எமது நிறுவனத்தின் நிபந்தனை யாகும்.

NALIN Information Technologies(Pvt)Ltd
Computers of the North

**Email – info@nit.lk**
**Contact No - 077 542 7426**
**194/2 Parameswara Junction,**
**Palaly Road, Jaffna.**

# மரண அறிவித்தல்

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 06 . 03 . 1943 | 13 . 07 . 2023 |



## திருமதி மரிஸ்ரெல்லா (ரதி) பெனடிக்ட்

இலக்கம் 41, யாழ் வேம்படி வீதியை பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி மரிஸ்ரெல்லா (ரதி) பெனடிக்ட் கடந்த (13.07.2023) வியாழக் கிழமை நித்திய இளைப்பாறுதல் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - அக்னஸ் தம்பதிகளின் புதல்வியும் காலஞ் சென்ற ஜோசப் பெனடிக்ட் அவர்களின் அன்பு மனைவியும், லெஸ்லி (லண்டன்), சுமதி, மோகன் (பிரான்ஸ்), செல்லா (கனடா), பிரியா (இந்தியா) ஆகியோரின் அன்பு தாயாரும், பிறிஸ்கா, குலேந்திரராஜா (Appolo Opticals), அம்பிகா, சுதா, சுரேஷ், ஆகியோரின் அன்பு மாமியாரும் சோபினி, ஜோனத்தன், ஜொஹான், டினுஷா, டெனிஷன், டிரொக்ஷி, ரவிசங்கர், விமலா, பிரியா, பென்ஜோன்சன், ஷாருக்கா, நேருக்கா, எரிக், மிதுசன், மாதுஷி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான ஜீவரட்ணம், குணரட்ணம், ஜெயரட்ணம், ஆகியோரினதும் மற்றும் புஷ்பராணி, பிலோமினா, கிறிஸ்டினா, பியாட்ரிஸ், ஜசிந்தா, விஜய ரட்ணம், தனரட்ணம், துரைரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (18.07.2023) செவ்வாய்க்கிழமை இலக்கம் 27/22, யாழ் ஈச்சமோட்டை, முதலாம் ஒழுங்கையிலுள்ள அவரது இல்லத்தில் காலையிலிருந்து அஞ்சலிக் காக வைக்கப்பட்டு இன்று (19.07.2023) புதன்கிழமை மாலை 3:30 மணியளவில் யாழ் கொஞ்சேஞ்சி மாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மிக மன வேதனையுடன் தெரியப்படுத்துகின்றோம். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 51284)AH-1

**077 674 5634, 077 663 3718**

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10 - 04 - 1968 | 17 - 07 - 2023 |



## திரு. வேலாயுதம் சிவசக்திவேல்

(பிரதி அதிபர் – யா/ இணுவில் இந்துக் கல்லூரி,
முன்னாள் அதிபர் – யா/ ஆனைக்கோட்டை பாலசுப்ரமணிய வித்தியாலயம்,
முன்னாள் அதிபர் – யா/ பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்)

யாழ். சண்டிலிப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும், கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. வேலாயுதம் சிவசக்திவேல் நேற்றுமுன்தினம் (17.07.2023) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதம் - இராசமலர் தம்பதிகளின் அன்பு மகனும், இராசையா (ஓய்வுபெற்ற நில அளவையாளர்) - இந்திராணி தம்பதிகளின் பாசமிகு மருமகனும், ஆனந்தஜோதியின் (ஆசிரியை - யாழ். இந்துக்கல்லூரி, முன்னாள் ஆசிரியை - யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை) அன்பிற்கினிய கணவரும், ஆரணி (மாணவி - யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), சாத்விகன் (மாணவன் - யாழ் இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசத்துக்குரிய தந்தையும், காலஞ்சென்ற சந்திராதேவி மற்றும் இந்திராணி, சிவபாலன் (ஓய்வுபெற்ற வங்கி முகாமையாளர் - இலங்கை வங்கி), சிவகுமாரன் (ஓய்வுபெற்ற உதவிக் கல்விப்பணிப்பாளர் - கணிதம், வலிகாமம் கல்வி வலயம்), சித்திராதேவி (கொலன்ட்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜோதிமாலா (ஜேர்மனி), கிருஷ்ணஜோதி (நோர்வே) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.07.2023) வியாழக்கிழமை பிற்பகல் ஒருமணியளவில் கோண்டாவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோண்டாவில் கிழக்கு கட்டையாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**074 124 6236**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.